KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

8-NOV 1930

Vol 3] 1930 ௵ செப்டம்பர் ௴ 4௳ [No 35

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 681
2. அப்பர் (இரத்தினப் பரீட்சை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L. 683
3. மாதவி மாதவம்—பொ. இராமானுஜன் 686
4. நம்மாழ்வார் வைபவம் (2ம் பத்து—1ம் தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 688
5 குறுந்தொகை (பாட்டு 144—155)
K. இராமரத்னம் ஐயர் B. A. 690
6. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப் படலம்) 693
7. கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 695
8. வர்த்தமானம் 699

18915

## கலாநிலயம்

### மண்காற்று

நான்நானென்று இகலிப் புரியலாகும் தேர்தல்களில் இரத்தலின் இகழ்ச்சியும், வஞ்சனைச் சூழ்ச்சிகளின் தீமையும், பிறர்பழிதூற்றித் தன்புகழ்போற்றுகின்ற கொடுமையும், பொருளல்லனவற்றைப் பொருளெனும்படி மருட்டிவைக்கின்ற மாயப் பொய்ம்மையும் நிகழவேண்டியது இன்றியமையாததே யாகையால், மானிடவாழ்க்கையின் நன்னோக்கங்களையும் விழுமிய ஒழுக்கத்தையும் சிதைத்து இத்தேர்தல்கள் செய்கின்ற பொல்லாங்கு மிகப் பெரியதென்று உரைப்பதற் கையமில்லை. இக்காலமாந்தர்கள் தேங்கிக் குழம்புகின்ற பொய்வாழ்க்கையெனுங் குட்டையுள் தேர்தலெனுமம் மேதிக்குல மிறங்கிக் கலக்குவதால் கொப்புளங்கொண்டெழும் புற்புதங்களையே, இச் சட்டசபைகளும் மற்ற ஸ்தாபனங்களும் தம் பயனிலாப் பகட்டினால் ஒக்கும். இவைகளின் நிலையின்மையும் அன்னதே.

தேர்தல்களிலுள்ள ஏனைய தீமைகளெல்லா மொருபுறமிருக்க, பிறரைப்பழித்தலும் தன்னைப் புகழ்வதும் ஆகிய இவ்விரண்டும் எத்துணைக் கொடியனவென்பதை வேதவியாசர் மிகவும் அழகாகப் பாரதத்தில் விளக்கி இருக்கின்றார். "வள்ளுவர் வாழ்ந்த நாடன்றோ இது; இதன் பெருமையைக் காக்கும்பொருட்டு, எனக்கே ஓட்டு"க் கொடுங்கள் என்று கேட்பவர், "ஆவிற்கு நீரென்றிரப்பினும், நாவிற்கு இரவின் இளிவந்ததில்" என்ற திப்பியவாக்கு இருப்பதையுந் தெரிந்துகொள்ளாமை போன்றே, "பாரதமனைய பெருங்காப்பியங்களால் திகழ்கின்ற இத்தேயத்தின் பெருமையைக் காக்க வல்லவன் யானே; ஏனையோரெல்லாம் இதற்குரியரா கார்; ஆகையால் சகோதர சகோதரிகளே, உங்களுக்குத் தொண்டாற்றுவதே கடமைபூண்டிருக்கும் எனக்கே உங்கள் 'ஓட்டை'க் கொடுங்கள்" என்று விளம்புகின்றவர்களும் அம் மகாபாரதத்தில் வெள்ளிடை மலையாய்க் கிடக்கும் ஓர்பாகத்தைக் காணுங்கண்கள் இல்லாதாரே ஆதல் வேண்டும்:—

மெய்விளங்கவந்ததொரு குருநிலத்தினிடை வெகுண்டெழுந்து செய்போரிலே ஒருதினத்தினில் தருமராசன் கன்னனால் நையவே மிகப் புடைப்புண்டு எதிர்நிற்கவாற்றாமல் கையயர்ந்து சென்று தன் பாசறை சேர்ந்துவருந்தினான். ஈதுணர்ந்த அர்ச்சுனன் தான்புரிந்திருந்தபோரினின்றும் விலகித் தருமன்பாற் சென்று உற்றதுவினவி யவனைத் தேற்றப்புக்கனன். கர்னனுக்கு இகலுடைந்ததால் மதிகலங்கிக்கிடந்த உதிட்டிரன் தம்பியின் சொற்களால் தணியாது பின்னரும் பொங்கியே, "ஏ, அர்ச்சுனா, தரணியெல்லாம் அத்துரியோதனனே தனியாள வெங்கானம் மீளநின்றேனென்னைத் தடுத்து இப்பொல்லாப் போரிற் புகுத்திய நீ என்செய்தாய். எவ்வம் வந்தென்னை இவ்வண்ணங் கதுவவே சூழ்ந்தனைபோலும். வஞ்சனையின்றிப் போர் செய்பவன் என்தம்பியரில் வீமனேயாவான். கன்னனை மடித்தாயல்லை, மற்றவரை இன்னுஞ் செற்றாயல்லை; நீயும் ஒரு வீரனோ! உன் கையிருக்குங் காண்டீபமும் ஒரு வில்லோ, சீ சீ!" என்றனன். இதனைக்கேட்ட இளையோனுக் குறுத்தெழுந்த கோபம் ஒரு நொடியில் பொறுக்கொணா விதனமாய் மாறியது. "அண்ணாவோ; என்

செய்வேன்! என் கரமிருக்கும் இக் காண்டீபத்தை நிந்தித்தார் எவரேனும் அவர்சிரத்தை அங்ஙனே கொய்தெறியக் கடவே னென்றவோர் சபதம் பாவியேன் செய்துளேன், அன்னதற்கு இன்றுநீ இலக்காயினை," எனக்கழறி யழுங்கினனேனும் உறையிருந்த கூர்வாளும் ஒருமுழங் கழன்றுவிட்டது. எங்கு மயமான பொருளாமக் கண்ணன் அன்று அங்கு மயலிருந்தனனாகிப் "பார்த்த, என்செயப் புக்கனை? வெங்களத்தில் நின் நெடும்பகைவர் நின்றிருக்க வீழ்த்தாமல் இங்குப்போந்து துங்கமிகு நின்முன்னைத் தொலைத்திடவோ வகைகற்றாய் நன்றுநன்று" எனத் தகைந்து, அவனை வேறோர் தனியிட மழைத்துச் சென்று, "உன் விரதமொழி வீணாக வேண்டா. ஆயினும் அதற்கு நீ தருமனைக் கொன்றுதீர வேண்டுமென்பது இன்றியமையாததன்று. ஆவியைக் கொல்வதனிலும் ஆயிரமடங்கு அதிகம்கொலைசெய்வதற்கு நிகராம்ஒருவனைப் பழித்துப் பேசுதல். ஆகலின் தருமனை நீ வாய்கொண்டவாறு வைதே உன் சபதத்தைத் தீர்த்துக்கொள்" என்று அறிவுறுத்தி அதற்குரிய மேற்கோள்களையும் எடுத்துக்காட்டினான். மகவான்மைந்தன் இது நீதியே என்றுணர்ந்தனனாகித் தருமன்பால் மீண்டு, "ஏ ஏ தரும, என்கைச் சிலையினை இகழ்ந்துரைத்தாய் ஒரு நீ. போரென்ற பேரிற்கும் அஞ்சுமொரு புன்மையோய், நீயோ இத்தனுவின் தன்மையைஉணரவல்லாய் மெல்லமளி மீதிருந்து பாஞ்சாலிநல்லாகம் புரிகின்ற கலவிப்போரல்லாமல் வில்லமளி களப் போர்கள் வேறெதுவுங் கண்டறியாச் சேவகன்நீ, மதியிலி, வலியிலி,வாளாவிரு" என்றின்னபல வன்சொற்கள் வழங்கித் தன் மூத்தோனை நெடிது பழித்தனன். இன்னபடி, வதைப்பதனிலுங் கொடிது வைவதென்னும் வாய்மையை வேதவியாசரின் வாக்கினால் கண்ணபிரான் நிறுவலானான். எனின் சட்டசபைகளிலிடம்பெற்றுச் சனங்களுக்கு நன்மைசெய்வதன்முன் இந்தத் தேர்தல்போட்டியில் எத்தனை எத்தனைபேர் வாயினால் வதை செய்யப்படுகின்றனரென்பதை எண்ணினுள் ளடக்கி இயம்பத்தானெண்ணுமோ!

பாரதக்கதை இன்னுந் தொடர்கின்றது—இத்தகைய வசைமொழிகளால் தன் தமையனை பழித்துக்கொண்டிருந்த தனஞ்சயன் துண்ணென வொன்று நினைத்துக் கழன்ற வாளினைத் தன் கழுத்தினில் வைத்துக்கொண்டு, "என் முன்னவனும் இத் தருமராசனை யாரேனும் வைது பழிப்பாராயின் அவர் சிரத்தினை அக்கணமே சீவி யெறியாது தாழேன், என்று யான் முன்னோர்நாள் செய்துளசபதம் பின்னுமொன்றிருக்கின்றது. பழித்தவன் யானே எனினும் என்தலையும் அச்சூளிற்குக் கடனிறுக்கவேண்டியதே. ஆதலின் இதோ அறுத்துக் கொள்கின்றேன்" எனத் தொடங்கினான். அவ்வளவில், கண்ணபிரான் அவனை அயலோரிட மழைத்தேகி, "அர்ச்சுன, நின் விரதமொழியினின்று உன்னை யான் வழுவச்சொல்லுவே னல்லேன். ஆயினும் ஒன்று கேள். முன்போலவே, பொருளையுங் கருத்தையும் பற்றி உன் சபதத்தை நிறைவேற்ற வேண்டுமேயல்லாது, சொல்லளவில் அதனைத் தொடர்ந்து கை யாள்வது அறிவன்று. உன் சபதப்படி இப்பொழுதுநீ தற்கொலை புரிந்துகொள்ள நிற்கின்றாய். இதுவேண்டா. ஒருவன் தன்னையே புகழ்ந்து பேசிக்கொள்வது, ஆயிரந் தற்கொலை புரிந்துகொண்டதற்கு அதிகமாகும். ஆதலின் நீ,தருமனிடஞ்சென்று உன்னுடைய மேம்பாட்டை விளம்பிக்கொள்; உன் சபதத்தைச் சாதித்தவனாவாய்" என வற்புறுத்தினான். இதுவும் ஏற்றதே என்றுணர்ந்தனன் அருச்சுனன். அண்ணன் முன் வந்தான். "என்னுடைய இணையிலாப் பெருந்தகைமையையும் போராற்றலையுமறந்து நீ, தரும, இப்போரில் நாம் இடைந்தழிவோமென் றஞ்சலாமோ! நிவாதகவச காலகேயர்களை இரவி வந்தொரு திசையின்வாய் நிசியெனப்பொருது வானவர்க் கரசளித்த விறல் நீர்மையான் யா னல்லனோ! என்முன்னே எதிர்நிற்க வல்லார் இருதளத்திலும் யாருளர்! விண்ணுலக இன்பவாழ்வில் இருக்கைநீங்கி யிங்குயான் மீண்டது உங்களையெல்லாம் காத்தளிக்க வேண்டுமென்ற வோர் உதாரசீலத்தினாலேயே என்பதனைநினைத்திலைபோலும். எல்லாக் குணங்களும் எல்லாப் பெருமையும் எல்லா வல்லமையும் உடையவன் யான். என்னின் மிக்காரிவ் வீரெழு தலத்திலுமில்லை கண்டாய்" என்றென்று தற்புகழ்ச்சியால் அர்ச்சுனன் தற்கொலைக்கோர் நேரிடு செய்தனன் எனக் காட்டுகின்றார் வியாசமா முனிவர். இதன்மேலொன்றும் விரிவுரை வேண்டியதில்லையே.

இங்கு நாம் உரைத்தவைகளினின்று 'தேர்தல்' என்னும் முறையும், அம்முறைகொண் டமைந்த 'பிரதிநிதிகள்' சேர்ந்து பொதுஜனக் காரியங்களை நலமுற நடத்துவதென்னும் நினைவும் எத்தூரம் ஏற்றுக் கொள்ளத்தக்கன வென்பதைப் புலப்படுத்த முயன்றோமல்லது தேர்தல்களில் உயரிய நோக்கமுடைய உத்தமர்கள் ஈரொருவர் இருத்தலே இயலாது என்று வாதிக்க வில்லை. இவர்களுமென்! தம் நோக்கத்தின் பயனை எய்துவிக்காதவர்களாத லன்றியுந் தாமும், தம்மைச்சூழ்ந்துள்ள மானமில்நிலையினால் மாசுண்டு இழுக்கமே யடைந்து முடிவாரென்று பரிவுடன் வருந்துகின்றோம். இத்தகைய தேர்தல்முறைகளையே ஆணிவேர்களாய் அமைந்து தழைக்கின்ற அரசியல் வாதங்களென்னும் புதர்களினுள் புகுந்துவிடுகின்றவர்களிற் சிலர், உத்தம சித்தமுடையவர்களா யிருப்பாராயின், அவர் தங்கள்நிலை சிதைவுற்றுச் சோர்ந்தாற் சோரலாமே யல்லாது, மானநிலை மதியாது உகள்கின்ற பொதுஜன வாழ்க்கைக் கெவ்வித உதவியும் செய்ய இயலாதென்பதை, இரண்டாயிர வருடங்களுக்கு முன் கிரீஸ்தேயத்தில் பொதுஜன ஆட்சியால் மிக உயர்ந்ததென்று கருதலாய ஏதன்ஸ் நகரின்கண் வசித்த பிளேடோ என்னும் வித்தக வுணர்வினர்செவ்விதின் உணர்த்துவாராகி, "என்செய்வானவன்? காட்டு மிருகங்களினிடையே அகப்பட்டுக்கொண்டவனை போல்கின்றான். அம்மிருகங்களில் ஒன்றாய்த் தானுமாய்விடத் தரியான். மற்று, அவைகளைக் கடந்தகலத் துணையில்லை. ஜனங்களுக்கேனும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கேனும் உண்மையாய உதவி யெதுவும் செய்ய இயலுமுன் தானே வீணிற் கெட்டழிந்து போவதே அவன்கதி யாகின்றது. இதனை உணர்ந்ததும் அவன் சும்மாவிருப்பதே தக்கதெனத் தேர்ந்து, 'எனக்கேனிது,என்வேலையை யான் பார்த்துக்கொண்டு போகின்றேன்' என்றதோர் எண்ணத்தவனாகின்றான். மண்காற்றடித்துச்சுழல்கின்றபோது சுவருக்கருகேஒருவன்ஒதுங்கிநிற்பதை யொக்கும் இந்நிலை. இப்படித் தன்னுடைய செம்மையும் நீதியும் செயிருறாமலிருந்தால் போதுமென வொதுங்கி, மற்றவர்கள் மானமும் அறமும் அழிந்து உழல்வதை அமைதியுடன் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுத் தன் நாட்கள் முடிந்ததும் சாந்தியுடன் இவ்வுலகைவிட் டகல்கின்றான்" என உரைக்கின்றார்.

இப்படித்தான், பொதுஜன ஆட்சியென்ற பேரால் நடைபெறுகின்ற முறைகளிலெல்லாம் பெரும்பகுதியோர் கெட்டவர்களாயும் மற்றச் சிறுபகுதியோர் செயலொன்றிற்கும் வகையின்றிக் கையற நிற்கின்றவர்களாயும் முடிதல்வேண்டும். இதனால் பொதுஜன வாழ்க்கை சிதைவடைந்து இழியாமலென்செய்யும்!



# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

### 12. இரத்தினப் பரிட்சை.

[664-வது பக்கத்தொடர்ச்சி]

இதுகாறும் புறப்பொருட் கலைகளான யுத்தக்கலைகளைப் பல பகுதிகளிற் கண்டோம். அரசர்கள் செய்யும் யுத்தம், பொன்னாசை மண்ணாசை யென்னும்இரு வகைப் பற்றுக்களால் பெரும்பாலும் நேருமாதலால் அளவற்ற பொன் கொடுத்து வாங்கும் இரத்தினங்களின் பரிட்சை அப்பர் அறிவாரோ என்று முதலில் ஆராய்வோம். திருநாவுக்கரசுநாயனார் திருப்புகலூரில் உழைவாரத்துடன் திருப்பணி செய்யுமிடத்தில் பற்பல இரத்தினங்களைக் கண்டாரெனவும், அவற்றை உழைவாரத்தால் எடுத்து எறிந்துவிட்டன ரென்றும் பெரியபுராணம் கூறுவதினின்று, மாணிக்கங்களின் மதிப்பும், அவற்றின் குணங்களும் அப்பருக்குத் தெரியுமோ, அல்லது அறியாது அவற்றைக் கடிந்தாரோ வென்னும் ஐயம் இந்நூதன நாகரிககாலத்தி லெழக் கூடுமாதலால், வாகீசப்பெருமான் அந்தக் காலத்தில் இரத்தினப்பரிட்சை யென்னும் கலையில் * வல்லுனரெனக் காட்டத்தக்க$ சில அகச்சான்றுகளைக் கூடியவாறு ஆராய்ந்து பின்னர்ப் பூமிப்பரிட்சை யென்னும் கலைக்குச் செல்லுவோம்.

இரத்தினப் பரிட்சை யென்பது, இரத்தினங்களின் குணங்கள் எவையென்றும் குற்றங்களெவை என்றுங் கண்டறியுங் கலை. இதில் வல்லோர் நவரத்தினங்களை நால்வகைச் சாதியாகப் பிரித்துக் குணங்களுக் கேற்றவாறு அவைகளைக்கொள்வர். நவஇரத்தினங்களெனப் படுவன யாவை என்றும் அவ்வவற்றின் குற்றங்கள் முறையே எவை என்றும் குணங்கள் முறையே எவையென்றும் சற்றுத் தேவாரச் சொற்றொடர்களினால் ஆராய்வோம். அவ்வாறுசெய்யப்புகு முன்னர் இரத்தினங்களின் வகைகள் யாவை யென்பதைக் காண்போம்.

(i) இரத்தினங்களின் வகை

இரத்தினங்கள் ஒன்பதென்பர் மேலோர். வகுப்புக்களின் சங்கையில் பேதப்படாவிடினும், இவை யிவைதானென நிர்ணயம்செய்யப் போதுமான ஆதரவுகள் இல்லை. ஆயினும், நூற்களிற் காண்பன இவையே.

(1) வயிரம் - இது எல்லாப் பொருள்களிலும் வலியது. எவ்வகையிலும் மிகவும் சிறந்தது.

குருகாம் வயிரமாங் கூறு நாளாம்
கொள்ளுங் கிழமையாங் கோளே தானும்
பருகா வமுதமாம் பாலி னெய்யாம்
பழத்தி னிரதமாம் பாட்டிற் பண்ணும்
ஒருகா லுமையாளோர் பாக னுமாம்
உண்ணின்ற நாவிற் குரையா டியாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே.
திருக்கருகாவூர் - திருத்தாண்டகம் 6.

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறுடித் திரிவீர்!
செத்தார்தம் மெலும்பணிந்து சேவேறித் திரிவீர்!
செல்வத்தை மறைத்துவைத்தீ ரெனக்கொருநா
[ளிரங்கீர்
முத்தார மிலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி மெய்க்கினிதாய் நாறும்
கத்தூரி கமழ்சாந்தும் பணித்தருள வேண்டும்
கடனாகைக் காரோண மேவியிருந் தீரே! சுந்தரர்.

(2) மரகதம்-இதைப் பச்சை என்பர். இதற்குக் கருடோற்காரமென்னும் பெயர் வடமொழியிலுண்டு. ¶. மரகதத்தின் ஒளியைப் பார்வதிதேவியார் திருமேனிக்கு ஒப்பிடுவர்.

முத்தின்றாழ் வடமுஞ் சந்தனக் குழம்பு
நீறுந்தன் மார்பினின் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டி மாதேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்மர கதமடுத் தாற் போல்
அத்தனு ருமையோ டின்புறு கின்ற
ஆலவா யாவது மிதுவே. சம்பந்தர்

மரகதமாமணி யென்று அப்பரும் சிவபெருமானை யழைப்பார்.

மலைமகடங் கோனவனை மாநீர் முத்தை,
மரகதத்தை மாமணியை மல்கு செல்வக்
கலைநிலவு கையானைக் கம்பன் றன்னைக்,
காண்பினிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை
விலைபெரிய வெண்ணீற்று மேனி யானை,
மெய்யடியார் வேண்டுவதே வேண்டு வானைச்
சிலைநிலவு கரத்தானைத் திருமாற் பேற்றெஞ்,
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தே னானே.
திருமாற்பேறு - திருத்தாண்டகம் - 3.

(3) பதுமம் நீலம் விந்தம் படிதம் என்னும் நால்வகைச் சாதி மாணிக்கங்கள்—

" மாணிக் கத்தியல் வகுக்குங் காலை
சமனொளி சூழ்ந்த வொருநான் கிடமும்

---

*முத்தினை மணியைப் பொன்னை முழுமுதற் பவளமேய்க்கும்
கொத்தினை வயிர மாலைக் கொழுந்தினை யமரர் சூடும்
வித்தினை வேத வேள்விக் களிற்றினை யுரித்த வெங்கள்
அத்தனை நினைந்த நெஞ்ச மழகிதா நினைந்த வாறே.
நினைந்த - திருநேரிசை 1.

$ வெற்புறுத்த திருவடியாற் கூற்றட்டானை,
விளக்கினொளி, மின்னினொளி, முத்தின்சோதி
ஒப்புறுத்த திருவுருவத் தொருவன்றன்னை,
யோதாதே வேத முணர்ந்தான்றன்னை
அப்புறுத்த கடனஞ்ச முண்டான் றன்னை,
யழுதுண்டா ருவந்தாறு முலவாதானை
அப்புறுத்த நீரகத்தே யழலானானை,
யாரூரிற் கண்டடியே னயர்த்தவாறே.
திருவாரூர் - திருத்தாண்டகம் 2.

¶ வலனின் வயிற்றின் புறத்தை (பித்தத்தைக்) கொத்தி விழுங்கிய கருடன் கைத்தலா லுமிழ, அது பன்மலைகளிலும் ஊறிப் பிறத்தலின் இப்பெயர் பெற்றதென்பர்.

நால்வகை வருணமு நவின்றவிப் பெயரும்
பன்னிரு குணமும் பதினறு குற்றமும்
இருபத் தெண்வகை யிலங்கிய நிறமு
மருவிய விலையும் பத்தி பாய்தலு
மிவையென மொழிப வியல்புணர்ந் தோரே''

மேற்கண்ட மாணிக்கங்களில் பதுமம் என்பது பதுமராகம் என்னும் ஒருவகைக் கல். இதைச் சாதுரங்க மெனவும் மொழிவர். நீலமென்பதை நீலகந்தி யென்றும் சௌகந்தி யென்றும் கூறுவர். விந்தமென்பதைக் குருவிந்த மென்பர். இரத்தவிந்து என்பதுமுண்டு. இதை உலகவழக்கில் "கெம்பு" எனக்கூறுவர். அப்பர் இதைக் குருமணி யென்பர்.

கருமணியைக் கனகத்தின் குன்றொப் பானைக்
கருதுவார்க் காற்ற வெளி யான் றன்னைக்
குருமணியைக் கோளரவ மாட்டு வானைக்
கொல்வேங்கையதளானைக் கோவணவன் றன்னை
அருமணியை யடைந்தவர்கட் கமுதொப் பானை
யானஞ்சு மாடியை நானபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்த வாறே.

திருமுதுகுன்றம் - திருத்தாண்டகம் - 1.

இப்பதிகத்தின் மூன்றுஞ்செய்யுளையும் நோக்குக:-

எத்திசையும் வானவர்க டொழநின் றானை
யேறூர்ந்த பெம்மானை யெம்மா னென்று
பத்தனுப் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை
முத்தினை யென்மணியை மாணிக் கத்தை [பானைச்
முளைத்தெழுந்த செம்பவளக் கொழுந்தொப்
சிந்தனையென் றிருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்த வாறே.

படிதம் என்பது கோவாங்கு. இந்த நான்குவகை மாணிக்கங்களின் பேர் இவையென்னும் சூத்திரம்:—

"வன்னியிற் கிடக்கும் வருணநாற் பெயரும்
முன்னிய சாதுரங்கம் ஒளிர்குரு விந்தம்
சௌகந்தி, கோவாங்கு, தாறு கும்மே!''

இவற்றுள் சாதுரங்கமென்னும் பதுமராக வொளி பத்துவகையாகும்:—

"சாதகப் புட்கண் தாமரை கழுநீர்
கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு *
வன்னி மாதுளம் பூவிதை யென்னப்
பன்னுசாதுரங்கவொளிகுணம்பத்து''-கல்லாடம்

குருவிந்த நிறம் வருமாறு:—

"திலக முலோத்திரஞ் செம்பருத் திப்பூக்
கவிர்மலர் குன்றி முயலுதி ரம்மே
சிந்துரங் குக்கிற் கண்ணென வெட்டு
மெண்ணிய குருவிந்த மன்னிய நிறமே''

இதுவே கல்லாடத்தில்,

"செம்பஞ் சரத்தந் திலக முலோத்திர
முயலின் சோரி சிந்துரம் குன்றி
கவிரல ரென்ன கவர்நிற மெட்டாங்
குருவிந் தத்திற் குறித்தன நிறமும்''

எனப் பகரப்பட்டது. சிவபெருமானை அப்பர் "எரி போன் மேனிப் பிரான்'' எனத் திருவங்கமாலையிற் புகழ்ந்தகாலை அவர் இம்மணியின் நிறத்தை யெண்ணியு மிருக்கலாம்.

சௌகந்திக் கறுவகை நிறங்கள் மொழியப்படும்:—

" கோகிலக்கண், செம்பஞ்சு கொய்ம்மலர்ப்பலாசம்
அசோக பல்லவம் அணிமலர்க் குவளை *
யிலவத் தலர்க ளென்றுறு குணமும்
சௌகந் திக்குச் சாற்றிய நிறனே''

[பலாசமென்பது $ ஒருவகை அலரி போலும். கஸ்தூரிப்பட்டை யென்னும் ஒருவகைப் பூஞ்செடியுமாம். இது பெரும்பாலும் பாலைநிலச்செடியாம்]. கல்லாடத்தில் குவளைக்குப் பதிலாய்ச் செம்பென்பர்:—

" அசோக பல்லவம் அலரிசெம் பஞ்சு
கோகிலக் கண்ணீ ளிலவலர் செம்பெனத்
தருசௌ கந்தி தன்னிற மாறு.''

கோவாங்கு நிறம் நான்கு:—

''கோவைநற் செங்கல் குராமலர் மஞ்சளெனக்
கூறிய நான்கும் கோவாங்கு நிறமே''.

ஆயினும்,

" செங்கல் குராமலர் மஞ்சள் கோவை
குங்கும மஞ்சிற் கோவாங்கு நிறம்''

என்பர் கல்லாடத்தில்.

இம்மாணிக்கங்களையெண்ணியோ, அல்லதுவயிரத்துடன் அவைகளை ஒப்பிட்டோ ¶ திருநாவுக்கரசரும் சிவபெருமானை இப்படிப் பாடினர்:—

" விழுமணி யயிலெயிற் றம்பு வெய்யதோர்
கொழுமணி நெடுவரைக் கௌவிக் கோட்டினர்
செழுமணி மடற்றினர் செய்ய வெய்யதோர்
கெழுமணி யரவினர் கெடில வாணரே ''
—திருக்கெடிலவாணர். பண்—காந்தாரபஞ்சமம்.

---

* பாசத்தைப் பற்றறுக்க லாகு நெஞ்சே,
பரஞ்சோதி! பண்டரங்கா! பாவநாசா!
தேசத் தொளிவிளக்கே! தேவ தேவா!
திருவாரூர் திருமூலட் டானு வென்று
சேசத்தை நீபெருக்கி நேர்நின் றுள்கி,
நித்தலுஞ் சென்ற டிமேல் வீழ்ந்து நின்று
ஏசற்று நின்றிமை யோரேறே யென்று
மெம்பெருமா னென்றென்றே யேத்தா நில்லே.
திருவாரூர் - திருத்தாண்டகம் 9.

* மழுங்கலா நீறுடு மார்பர் போலும்,
மணிமிழலை மேய மணுளர் போலும்
கொழுங் குவளைக் கோதைக் கிறைவர் போலும்
கொடுகொட்டி தாள முடையர் போலும்
செழுங்கயிலா யத்தெஞ் செல்வர் போலுந்
தென்னதிகை வீரட்டஞ் சேர்ந்தார் போலும்
அழுங்கினு ரையுறவு தீர்ப்பர் போலு
மழகியரே யாமாத்தூ ரையனுரே.
திருவாமாத்தூர் - திருத்தாண்டகம்-10.

[கொம்பின்
$ புன்னலைத் துண்ட வோட்டி புண்டுபோய்ப் பலாசங்
சுன்னலைச் சடலை வெண்ணீ றணிந்தவர் மணிவென்
[னேற்றுத்
துள்ளலைப் பாகன் றன்னைத்தொடர்ந்திங்கே கிடக்கின்
[றேனை
அள்ளலைக் கடப்பித் தாளு மதிகைவீ ரட்ட னுரே.
திருவதிகை - திருநேரிசை 6.

¶ வெருவி வேழமிரியக் கதிர்முத்தொடு வெண்பளிங்
குருவி வீழ்வயிரங் கொழியாவகி லுந்துவெள்
ளருவி பாயுமணிச் சாரலனே கதங்காவதம்
மருவி வாழும்பெரு மான்கழல் சேர்வது வாய்மையே.
சம்பந்தர்.



(4) புருடராகம் : — பூனைக்கண் அனையதாய்ப் பொன்னைத் தேய்த்தாற்போன்றது புருடராக மெனப்படும்.

(5) வயிரேயம்:—$ இது சுத்தமான சூரியவொளி யென்னவும், தேன் துளியெனவும் விளங்கும்.

(6) கோமேதகம் * :— இது மஞ்சளும் சிவப்பும் கலந்தாலொத்த நிறத்தையுடைய கல்லாம்.

(7) நீலம்:—¶ மாணிக்க வருக்கத்தில் நீலகந்தி யென்பது ஒருவகை யென்று முன்னரே கண்டோம். நவரத்தினங்களில் தனியாய் எடுத்துக் காட்டப்படும் நீலக்கல் "இருள் தெளிந்தனைய'' தென்பர் மேலோர்.

மைம்மா நீலக்கண்ணியர் சாரன் மணிவாரி
கொய்ம்மா வேனலுண்கிளி யோப்புங் குற்றாலம்
கைம்மா வேழத்தீ ருரிபோர்த்த கடவுள்ளெம்
பெம்மான் மேய நன்னகர் போலும் பெரியீர்காள்.
சம்பந்தர்.

மையாரு மணிமிடற்றாய் மாதோர் கூறாய்
மான்மறியு மாமழுவு மனலு மேந்தும்
கையானே காலனுடன் மாளச் செற்ற
கங்காளா முன்கோளும் விளைவு மானாய்
செய்யானே திருமேனி யரியாய் தேவர்
குலக்கொழுந்தே தென்னானைக் காவுண் மேய
வையாவுன் பொற்பாதம் அடையப் பெற்றா
லல்லகண்டம் கொண்டடியே னென்செய் கேனே.
திருவானைக்கா- திருத்தாண்டகம் 7.

சௌகந்தியென்னும் நீலகந்தி மாணிக்கத்தின் நிறம் இவ்வாறென முன்னரே கண்டோம். இருள் தெளிய வைத்தாலனைய * நீல ரத்தினத்தின் சாதிகள் குணம் குற்றம் முதலியன நமது முன்னோர் செவ்வனே ஆராய்ந்தறிந்தனர். நீலகந்தியின் இயல்பு பின்வருமாறாகும்:—

"நீலத் தியல்பு நிறுக்குங் காலை
நால்வகை வருணமு நண்ணுமா கரமும்
குணம்பதி னொன்றுங் குறைபிரு நான்கு
மணிவோர் செயலு மறிந்திசி னோரே''

இதன் நால்வகை வருணமாவது:—

"வெள்ளை சிவப்புப் பச்சை கருமையென்
றெண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே''†

இவற்றைப் பின்னர் ஆராய்வோம்.

(8) முத்து - இது மூவகைத்து—சந்திரனைப் போன்ற வெண்முத்து, வியாழத்தைப் போன்ற பொன்நிற முத்து, அங்காரகனைப்போன்ற செந்நிற முத்து என்பர்.

"சந்திர குருவே யங்கா ரகனென
வந்த நீர்மைய வட்டத் தொகுதி''

[குறிப்பு:—வட்டத்தொகுதி யென்பதை ஆணிமுத்தெனக் கொண்டு, வெண்முத்து செந்நீர் முத்து, ‡ ஆணிமுத்தென வகுப்பாரு முளர்]

(9) பவளம்:- இதைச் செங்கொடிவல்லி யென்பர். அதாவது செம்மை மிக்குக் கொழுவிதாக வளர்ந்த கொடிப்பவளம்; இதன் அழகை திருநாவுக்கரசர்

" பவளத்தடவரை போலுந் திண்டோள்
களத்தோண் மிசையே
பவளக்குழை தழைத்தா லொக்கும்
பல்சடை யச்சடைமேல்
பவளக் கொழுந்தன்ன பைம்முக
நாகமந் நாகத்தோடும்
பவளக்கண் வாலதி யெந்தை
சூடும் பனிமலரே என்பர்.
தனித்திருவிருத்தம் 1.

இது தனித்தும் முத்துடன் கலந்தும் பணிகளிற் பயன்படும்.

---

$ இதன்இலக்கணம் இருவே றுருவின யுடைத்தென்பர் சிலர். எனவே கோமேதகத்தின் இலக்கணத்தை யிதற்கு அமைப்பார் அவர்.

* ஒளியினையுடைய மட்டுநிறமா யிருப்பன கோமேதகம் என்பர் சிலர்.

[குறிப்பு:—பண்டைக்காலத்திலேயே வயிரேயத்திற்கும் கோமேதகத்திற்கும் பெயர் மாறுட்டமாயிருந்ததாகப் புலப்படுகின்றது. இவ்விரத்தினங்கள் கிடைப்பதும் ஏகதேசமாதலானும், மற்ற மணிகளைப் போற்றுவதுபோல் இவற்றைப் போற்றாமையாலும் இவற்றின் இலக்கண வரையறுப்புத் தெளிவாய் நூல்களிற் காணப்படவில்லை]

¶ தேய்பொடி வெள்ளை பூசி யதன்மேலோர்
திங்கடிலகம் பதித்த நுதலர்
காய்கதிர் வேலை நீல வொளிமா
மிடற்றர் கரிகாடர் காலோர் கழலர்
வேயுட னாடு தோளி யவள்விம்ம
வெய்ய மழுவீசி வேழ வுரிபோர்த்
தேயிவ ராடு மாறு மிவள்காணு
மாறு மிதுதானி வர்க்கொ ரியல்பே.
அப்பர் - சிவனெனு மோசை 3.

*நீல மாமணி நிறத்தரக் கனையிரு பதுகரத் தொடொல்க
வாலி னற்கட்டிய வாலி யார்வழிபட மன்னு கோயில்
ஏலமோ டிலையில வங்கமே யிஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை யடைகுரங் காடு துறையே.
சம்பந்தர்.

† நீலமாமணி கண்டத்தர் நீள்சடை
கோல மாமதி கங்கையுங் கூட்டினர்
சூல மான்மழு வேந்திச் சுடர்முடிப்
பானெய் யாடுவர் பாலைத் துறையரே.
திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை 1.

‡ ஆணி போலநீ யாற்ற வலியைகாண்
ஏணி போலிழிந் தேறியு மேங்கியும்
தோணி யாகிய சோற்றுத் துறையர்க்கே
பூணி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே.
திருச்சோற்றுத்துறை - திருக்குறுந்தொகை 7.

ஒட்டக்கூத்தர் பாடிய
**தக்கயாகப் பரணி**
(உரையுடன்)
மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

# மாதவி மாதவம்

[666 - வது பக்கத் தொடர்ச்சி]

கோவலன் செயலைக் கௌசிகன் உரைத்தல்.

**கௌ**சிகன் என்னும் வேதியனிடத்துத் தன் கரையற்ற துயர்ப்பெருக்கை யெடுத்தியம்பி, முடங்கல் ஒன்று தீட்டி, அதனையவ் வேதியன்பா லீந்து "ஐய! இதனை யெனது ஆருயிரனையார்க்குக் காட்டி அவரை யிங்கே அழைத்துவருக" என்று கூறியனுப்பிய மாதவி "என் ஓலையைக்கண்டதும் எனதன்பன் என்பால் வருதல் உறுதி; ஒருக்கால் அவர் சிறிது பின்னடையினும் கௌசிகன் வாளாமீளான்" என்று கருதியிருப்ப, அவள்முன் கௌசிகன்மட்டும் தன்னந்தனியனாய்ப் போந்து, 'செல்வி! உனது ஐயன் பொருள்வளம்வேண்டி வாணிகம்புரிதற்பொருட்டே தன் மனையாளொடு மதுரையைச் சேரலன்றி, மற்று உன்பால் வெறுப்பொடன்றாம். 'நான் விரும்பிய பொருள் ஈட்டுமளவும் நம்நகர் மீளேன்' என்றுங்கூறினர். ஆதலின், அதுகாறும் நீ ஆற்றியிருத்தலே யேற்புடைத்து' எனக் கூறிச்சென்றான். மாதவியின் மனநிலையை நாம் ஈண்டெடுத்துரைத்தல் மிகையே. மாதவி கணிகையர்குலத்துப் பிறந்தவளாயினும் கற்பிற்சிறந்த பொற்புடைப் பெண்டிரில் தலைமைப்பேறு பெறுதற்குரியாள் அவளேயாவள். வறியவன் துறவுபூணல் பெருமையன்று; மற்று, அரசன் துறவு மேற்கொள்ளலே அருஞ்செயலாகும். குலமகளிரின் இயல்பு நிறையுடைமையே யன்றோ? நிறையுடைமை யின்னதென்றறியாப்பொதுமகளிர் கற்புச்சான்ற பொற்புடையாட்டியாகத்திகழின், மற்றவரினும்மேற்பட்டவராதற்கோரையமுண்டோ? ஒப்பருங்குணனுடைச் செல்வி நம் மாதவிக்குக் கௌசிகன் உரைத்தமாற்றம் மருமத்து எறிவேல் பாய்ந்ததொப்ப வருத்தியிருக்கும். கோவலன் தன்மீதுகொண்ட வெறுப்பினாலேயே நகர்நீங்கியதாகக் கூறியிருப்பினும் அவள் அத்துணைத்துன்பம் பட்டிராள். 'அவள்மீது எனக்கு ஒருசிறிதும் வெறுப்பில்லை; பொருளின்றி வறியனாய் வாழவே நாணுகின்றேன். ஆதலின், அதுகருதியேமதுரைபோகின்றேன்" எனக்கூறின் பளிங்கன்ன அவள்நெஞ்சம் உடைந்து பிதிர்தற்கு வேறொன்றும் வேண்டுமோ? பிரிவினாலைந்துருகும் செல்விக்கு இச்சொல் எத்துணை யாறுதலளித்திருக்குமென்பதை நாமிங்கு விரித்தல் மிகையெனினும் சில சொல்லாது செல்ல இயலவில்லை. மாதவியைக் காதலியாகப் பெற்றபின்னரே கோவலன் தன் பொருளனைத்தையும் அளித்து வறுமைநிலை யெய்தியுள்ளான். ஒருக்கால் அதற்குமுன்னர்ச் சிற்றினஞ்சேர்ந்துசிறிதுபொருள் அழித்திருக்கலாம். இளமையிலிருந்தே அவன் * சிற்றினச் சேர்க்கையுற்றவன் என்பது, "மதிமுக மடவார்தம் ஆயத்துப் பாராட்டிக்... காதலாற் கொண்டேத்துங் கிழமையினான்" எனவும், "நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்து" எனவும் அவனைக் குறித்துள சில அடிகளே தெளிவுபடுத்தும். மாதவியொடு உறவுகொண்ட பின்னர் அவன் பொருளிற் பெரும்பகுதி அறவழியிலே செலவழிந்தமைக்கு மணிமேகலை பிறந்தபொழுது அவன் புரிந்த அறச்செயலே சான்று பகரும். எங்ஙனமாயினும் மாதவிக்குக் காதலனானபின்னரே கோவலன் பொருளனைத்தும் இழந்தனனென்பது உண்மை. ஒருவன் தவறுபுரிந்தனனெனினும், அதனை மீண்டும்மீண்டும் அவன்முன் எடுத்துரைத்தல் அவனை ஊசிகொண்டு குத்துதல் போலாம். கழிக்கானலிலே மாதவியின் மனம்நோவவுரைத்தும், அதனை யவள் பொருட்படுத்தாது, தன் தோழியைத் தூதனுப்ப அப்பொழுதும் சுடுசொற் பல கூறியனுப்பினன் கோவலன். காதல் என்னும் விழுமிய குணத்தால் விழுங்கப்பட்ட மாதவி, மீண்டும் ஒருவனைத் தூதுபோக்கி, அன்னவன் வருகையை ஆவலொடு எதிர்பார்த்திருக்க, அதற்கவன் விடுத்த மறுமொழி இத்தகையதென முன்பு கண்டோம். "அந்தோ, செல்வக்காலை உடனுறைந்து, அல்லற் காலைப் பிரிபவள் யானாக, செல்வக்காலை பிரிந்து அல்லற்காலை உதவுபவள் எம்பெருமாட்டி (கண்ணகி) யேயோ? ஆ, இப் பெரும்பழிக் கென்செய்வேன்? என தன்பன் பிரிந்து சென்றதற்கன்றி எம் ஆயிழையும் இரவிடைக் கான்வழியே நடந்து நைதற் கேதுவானேனே" என அல்லும் எல்லும் ஆவிசோர்ந்து, தன் தலைவன் வருகையை யெதிர்நோக்கியிருந்தாள்.

*   *   *   *

காதல னிறந்தமை மாதவியறிந்து
போதி மாதவனே புகலென அடைதல்.

அங்ஙனம் இருந்தவளுக்கு "மருமத்து எறிவேல் பாய்ந்த பெரும்புண்ணையிற் கனல் நுழைந்தாலென்ன"க் "கோவலன் மதுரை மூதூர் மாட மறுகிற் சிலம்பு விலைகூறிச் செல்லாநிற்கையில், அந்நகர் மன்னனால் கள்வனெனக் கொலைசெய்யப்பட்டான்." என்னுஞ் செய்தி நகர்முழுதும் பரவலாயிற்று. மாதவிக்கு ஒன்றுந் தோன்றவில்லை. பொய்யோ மெய்யோ வென்றயிர்த்தாள். அந்தோ, உண்மை பொய்யாதல் யாங்ஙனம்? கோவலனுக்கு நட்பாளனும், அவனோடு அன்று (மதுரைப்புறஞ்சேரி) அறப்பள்ளியிலே அளவளாவிப்பேசி மகிழ்ந்தவனுமான மாடலனென்னும் மறையவனே அச்செய்தியைக் கோவலன் பெற்றோர் செவியகத்தே தெளித்தான். அது அப் புகார்முழுதும் படர்ந்து ஓடி மாதவியின் மனத்தையும் உடலையும் ஒருங்கே பிணித்து அசைவறச் செய்துவிட்டது.

"ஆங்கம் மாற்றம் அறிந்ததும் பூங்கொடி
தாங்கொ ணாத்துயர் தன்மனத் தெய்தலால்
ஏங்கி னாள்இளைத் தாள்திகைத் தாள்மனம்
வீங்கி னாள்விம் மினாள்விழுந் தாளரோ".

"நெஞ்சம் மெலிவேன் நினது தடந்தோளும்
கஞ்ச மலர்முகமும் என்றனியள் காண்பதுவோ?
மஞ்சுதவழ் வெற்பெறிந்த வச்சிரத்தோன் [தானழைப்ப
வஞ்சம் புரிந்தெம்மை வானு டடைந்தனையோ?"

தன் காதலன்பொருட்டே உயிர்வாழ்ந்திருந்த மாதவி மயங்கிய நெஞ்சொடு, செய்வதின்னதென்றறியாது, மறவண (பாவத்தன்மை) நீத்த மாசறு கேள்வி அறவண வடிகளை யடைந்து, அன்னார் அடிமிசை



முடியுற வீழ்ந்து, நிகழ்ந்தன கூறி, "அந்தோ, காதலன் உற்ற கடுந்துயர் கேட்டும், போதல் செய்யா வுயிரொடு நின்றேன்; பொற்கொடி மூதூர் (சம்பாபதி-புகார்) பொருளுரை யிழந்து நாணையும் துறந்தேன். அருட்பெருக்கே! அடிச்சியும் உய்யுமா றுளதோ?" என்றழுதாள். அதற்கு அடிகள் "நங்காய், வருந்தேல், பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம், பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்; பற்றின் வருவது முன்னது, பின்னது அற்றோர் உறுவது அறிக. கோவலன் குலச்செல்வி, பெருமைக் குறைவிடம், கற்பிற்கோர் கண்கண்ட தெய்வமாய் மிளிரும் கண்ணகியார் தென்னவன் தீதிலன் என்பதை யுணர்ந்தும், அன்னவன் ஆருயிர்ச் செல்வி கோப்பெருந்தேவியார் குறையிரந்து வேண்டியும் மதுரையை யெரித்தமை யிழுக்கே யன்றோ? தன் கணவனிடத்துக் கொண்ட பற்றுத் தன் பொறையையும் குறைபடச் செய்தது. அஃது அச்செல்வியின் மீண்டும் ஓர் பிறவிக்கு வித்தேயாகும். பிறந்தார் மூத்தார் பிணி நோயுற்றார், இறந்தாரென்கை யியல்பே அறிவாய். பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும், இறத்தலுமுடையது மக்கள் யாக்கை. இளமையும் நில்லா யாக்கையும் நில்லா, வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா" என் றின்னவாறு பிறப்பிற் றுன்பமும் பிறவா இன்பமும், அறத்தகை முதல்வன் (புத்த தேவன்) அருளிய வாய்மை, இன்பவாரமுது இறைவளை செவி முதல், துன்பம் நீங்கச் சொரிந்து "அறிவுவறிதாய் உயிர்நிறை காலத்து, முடிதயங் கமரர் முறைமுறையிரப்பத் துடிதலோகம் ஒழியத் தோன்றிப் போதி மூலம் பொருந்தியிருந்து, மாரனைவென்று வீரனாகிக் குற்ற மூன்று மற்றவனுக்கும், வாமன் பாதமே மனத்துட் கொண்டு ஒழுகுவாயாக அதுவே பிறவாயாக்கை பெறுதற்கேது.

தோடாரிலங்கு மலர்கோதி வண்டு
வரிபாடு நீடு துணர்சேர்
வாடாத போதிநெறி நீழன்மேய
வரதன் பயந்த அறநூல்
கோடாதசீல விதமேவி வாய்மை
குணனாக நாளு முயல்வார்
வீடாதவின்ப நெறிசேர்வர் துன்ப
வினைசேர்தல் நாளு மிலரே.

என்றருளினர். அவ் வறவுரை கேட்ட மாதவி ஒருவாறு மனத்துயர் நீங்கி, அத் தவப்பள்ளியிலேயே, அணிகலனும் பிறவும் நீத்துத் தவவேடம்பூண்டு, தன் மகள் மணிமேகலையோடு உறைவாளாயினள்.

*   *   *

மாதவியும் அவள் நற்றாயும்.

அஃதுணர்ந்த மாதவியின் நற்றாயாய சித்திராபதி வெய்துயிர்த்து அதிகமுங் கலங்கி, கொதித்தவுள்ளமொடுவிதுப்புறு நெஞ்சினளாய் "அந்தோ! எங் குலம் இவ்வாறாமோ? நன்று நன்று, என் மகளது நெஞ்சுரம் எத்துணை வலியுடைத்தென்பதை யின்று காண்பேன்! அவளை யென்குலமுறைக்கியைய நடக்குமாறு செய்யவென்னா லியலாவிடில் யானும் ஓர் வேசையர்குலத்து மாசிலாமணி யென உதித்தவ ளாவேனோ?" என்று வஞ்சினங்கூறித் தன் மகள் உறைவிடம்புக்காள். புக்கவள் மாதவியை விளித்து "மகளே, காதலன் வீயக் கடுந்துயரெய்திப் போதல்செய்யா வுயிரொடுபுலந்து, நளி (குளிர்ந்த) யிரும் பொய்கை யாடுநர்போல, முளி (மரம் முதலியவற்றின் கரடுமுரடான துண்டுகள்) யெரிப்புகூஉம் முதுக்குடிப்பிறந்த பத்தினிப்பெண்டிரல்லமே நாம்; பலர்தம் கைத்தூண் வாழ்க்கையே கடமையா வுடையேம்; பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில், யாழினம் போல இயல்பினம் அன்றே? நறுந்தாதுண்டு நயனில் காலை, வறும்பூத் துறக்கும் வண்டுபோல்குவம் யாம்; வினையொழிகாலைத் திருவின் செல்வி அனையேமாகி ஆடவர்த் துறப்பேம், அங்ஙனமாக, தாபதக் கோலம் தாங்கின மென்பது, யாவரும் நகூஉம் இயல்பினதன்றே? ஆதலின் உனது தவறுணர்ந்து கடிந்து, நம்மனை போந்து, நம்மரபிற் கியைய ஒழுகலே சால்புடைத்து' என்றாள். "அன்னாய், எனதன்பன் பிரிந்துசென்ற அன்றுமுதல் இன்றுவரை தங்களிடத்து இவ்விதவுரையன்றி வேறொன்றுங்கேட்டறியேன். நாமும் மக்களா? நம் வாழ்க்கையும் ஓர் வாழ்க்கையா? மேலோராயினும் நூலோராயினும் பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும், பிணியெனக் கொண்டு பிறக்கிட்டொழியும், கணிகையர் வாழ்க்கை கடையே யன்றோ?

பேய்மை யாக்குமிப் பேதமைக் கள்வனொடுடனாய்க்
காமுற்று மதன் பயத்தினிற் காமனைக் கடந்து
நமரூஉம் புகழ்கெடுப்பதோர் நன்னெறி நண்ணும்
வாமன்வாய்மொழிமறந்திட்டுமறந்தொழிகின்றாம்.

இதுகாறும் நாம் புரிந்தவினை போதும். இனியேனும் எங்கோன் இயல்குணன் ஏதமில் குணப்பொருள், உலகநோன்பிற் பலகதியுணர்ந்து, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனின் தாளிணையே தஞ்சமென அடைந்தாலன்றி நாம் உய்யோமென்பது உறுதி.

முன்றான் பெருமைக்க ணின்றான்
முடிவெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமொழிந்தான்
தனக்கென்று
என்றானு முள்ளான் பிறர்க்கே
யுறுதிக் குழந்தான்
அன்றே இறைவன் அவன் தாளிணை
சென்னி சேர்ப்பாம்.

என்று தன்னை யீன்றாட்கு அறிவுரை புகட்டிய வண்ணமே, நெஞ்சு நெக்குருகிக் கண்ணீர் துளிப்ப மாதவி நல்லாள்மாதவமுதல்வனை யேத்தி நின்றாள். தன்மகள் உரைத்த அறவுரைக்கு மறுவுரை யியம்ப-வலியின்றிக் கலங்கிய நெஞ்சொடு கையற்றுப் பெயர்ந்தனள் சித்திராபதிதான்.

*   *   *   *

# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[676-வது பக்கத் தொடர்ச்சி]

### 2-ம் பத்து 1-ம் தசகம்.

6-ம் பாசுரம்.

நைவாய எம்மேபோல் நாண்மதியே நீஇந்நாள
மைவா னிருளகற்றாய் மாழாந்து தேம்புதியால்
ஐவா யரவணைமேல் ஆழிப் பெருமானார்
மெய்வாசகம் கேட்டுன் மெய்ந்நீர்மை தோற்றாயே.

குறிப்புகள்:—நாண்மதி, (நாள் - நிறைவுள்ள அல்லது புதுமையான) கலைகள் நிறைந்து விளங்கும் சந்திரனென்பது பொருள். மைஇருள் - கருத்த இருள். மாழாந்து - மழுங்கி, நைவாய் - உடைந்து துண்டாய் விட்டாய். ஐவாய் அரவு-ஐந்துதலை நாகம், இங்கு ஆதிசேஷனைக் குறிக்கின்றது. அணைமேல் - சயநத்தில், ஆழிப்பெருமானார்-சக்கரத்தாழ்வாரை எப்பொழுதும் தரித்திருக்கிற எம்பெருமானார், மெய்வாசகம் கேட்டு-நிஜமென்று நீ நினைத்துப் பிரமித்த வார்த்தையைக் கேட்டு, உன் மெய்நீர்மை - உன்னுடைய சரீர சுபாவம், அதாவது பூரணகலைகளோடு விளங்கும் சுபாவம், தேம்புதி - உருவில் குறைந்தாய்.

பொழிப்புரை:—"நாண்மதியே, நீ இந்நாள் வலியதான இருளை அகற்றுகின்றதில்லை—ஏனெனின் இப்பொழுது மயங்கித் தோன்றுகின்றாய்—"பேதை நின்னைப் பிரியேன் என்றும் "ஏதத் விருத்தம்" என்றும் "மாசுச" என்றும் எம்பெருமான் அருளிச்செய்த வார்த்தையைக் கேட்டுத் திருவநந்தாழ்வான் முதலாகவுள்ள திவ்விய புருஷர்களோடே பழகி வர்த்திக்கிறவன் மெய்யல்லது சொல்லானென்று கொண்டு அவ் வார்த்தையைநம்பி என்னைப்போல் நீயும் அகப்பட்டாயாகாதோ வென்கிறாள்'—ஆறாயிரப்படி.

குறிப்புகள்:— தன்னைச் சரணமடைந்தவர்களை ஒருபோதும் விடுவதில்லையென்று இராமபிரான் தான் ஏற்ற விரதமாக இராமாயணத்தில் கூறியிருப்பதை ஆறாயிரப்படி எடுத்துக் காட்டுகிறது—"மாசுச" என்பது, ஸ்ரீ கிருஷ்ணபகவான் கடைசியாக அருச்சுனனுக்கு, "விசனப்படாதே" என்ற அர்த்தத்துடன் பகவத் கீதையில் கூறியது. கேட்டதில் தப்பில்லை; அப்படிக் கேட்டதை, நிஜமென்று நம்பியதால் கேடு விளைந்ததென்பது தாத்பரியம்.

இப்பாசுரத்தில் குறித்த விரஹஇலக்கணம்-நாள்தோறும் தேய்ந்து உருவுஇழத்தல், ஒளி மழுங்குதல், காதலரின் வார்த்தைகள் எல்லாம் உண்மை என்று நம்பி அவைகளில் விச்வாசம் வைத்தல், அதனால் வரும் மெலிவு.

7-ம் பாசுரம்.

தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கெம்
ஆற்றாமை சொல்லி அழுவோமை நீநடுவே
வேற்றோர் வகையில் கொடிதாய் எனையூழி
மாற்றாண்மை நிற்றியோ வாழி கனையிருளே.

குறிப்புகள்:—நாரணன் - குணபூர்த்தியுள்ளவன்; இவ்விடத்தில் ஆச்ரித சுலபத்துவத்தைக் காட்டுகின்றது. "அழுவோமை" பன்மை—இப்பிராட்டி, தன்னுடன் தன் தோழியையும், நாரை அன்றில் முதலியவைகளையும் சேர்த்துப் பேசுகிறாள். நடுவே - ஒரு காரணமுமின்றியே - விளிக்காதிருக்கையில் தானாய்த் தோன்றல் - அல்லது இடுவித்த திரைபோல் நடுவில் ஒருவருக்கொருவர் தெரியவொட்டாதபடி மறைத்தல். மாற்றாண்மை நிற்றி - துயரப்படச் செய்வாய்.

இப்பாட்டுக்குப் பழையஉரைகாரர்கள் இரண்டுவிதமாய்ப் பொருள்கொண்டிருக்கின்றனர்.

எம்பெருமானுடைய ஆச்ரித சுலபத்துவாதி குணங்களில் அகப்பட்டு அவனுக்கு அடிமையானோம். ஆதலால் அவனைப்பிரிந்த வியசநத்தை யொன்றும் பொறுக்கமாட்டாத நாங்கள், ஒருவர் மற்றொருவர் முகம் பார்த்துப் பரஸ்பரம் ஆற்றிக்கொள்ள எத்தனிக்கவிடாமல் எத்தனைகாலம் மறைத்துநின்று சத்துருக்களைவிடக்கொடுமையாய்த் துயரப்படுத்துகிறாய், ஓ இருளே இது தகாது, என்று துக்கிக்கிறாள், என்பது ஒரு பொருள்.

குறிப்பு:-சத்துருக்கள் நலிவுபட்டாருக்குக் கிருபை செய்வார்கள். இருட்டு அவரினும் அதிகமாய்ப் பீடிக்கின்றது. சத்துருவாயிருக்கைக்குக் காரணமும் யாதொன்றும் இல்லாதிருக்கச் சத்துருவினும் கேடாய் நலிவது பொறுக்கமாட்டாத் துயரம்.

2-வது பொருள் - எம்பெருமானுடைய ஆச்ரித சுலபத்துவாதி குணங்களில் நாங்கள் அகப்பட்டு அடிமையானோம்; ஆதலால் அந்த விஸநத்தைப் பொறுக்கமாட்டாமல் ஒருவாறு ஆற்றியிருக்க எத்தனிக்கையில் வாராய் இருளே! நீயும் அவ் வெம்பெருமானிடத்தில் எங்களைப்போல் ஆசைப்பட்டு ஒளியற்று முற்றிலும் விரகவியஸநத்தாலே கருகிப்போய் எங்கள் சூழலில் நடுவேவந்து வாயும் திறக்கமாட்டாதே உன் துக்கத்தைக் காட்டிப் பண்டே நோவுபடுகிற எங்களைச் சக்களத்திமார் படும்நலிவும் ஒரு ஆச்வாஸஹேதுவென்று நினைக்கும்படி எத்தனைகாலம் பாதிக்கக் கடவாய்; இருளே நீ துக்கம்நீங்கி வாழ்வாயாக.

இப்பொருள்தான் ஸ்ரீ ஆளவந்தார் கருத்தாக அம்மஹானின் சிஷ்யர், ஸ்ரீராமாநுஜ முனிக்குப்பாடம் சொன்னார். பின்னர் ஸ்ரீராமாநுஜர் அதைவிட முதலிற் கூறியபொருளே சப்தங்களுக்கு அத்தியந்தம் பொருத்தமென்று தம் சீடர்களுக்குப் பாடம் கற்பித்தார்.

குறிப்பு:— இரண்டாவது பொருள் பிரகாணத்தை அநுசரித்திருத்தலால் அதுவும் ஏற்றதென்று விளங்க ஸ்ரீ திருக்குருகைப்பிரான் பிள்ளான் தம் ஆறாயிரப்படியில் இரண்டு பொருள்களையுந் தழுவி முடிவில் 'நீ நடுவே சத்துருக்களினும் கொடியையாய் நின்று எத்தனைகாலம் பாதிக்கக்கடவை, கனையிருளே" யென்கிறாள்" எனப் பொருளுரைத்தார். ஒரு ஆசிரியரது உரை ஏற்றமென்றும் மற்றவர் உரை தாழ்வென்றும் சீடர்கள் நினைத்துப் போகலாகாதென்பது அவர் திருவுள்ளம்.

8-ம் பாசுரம்.

இருளின் திணிவண்ண மாநீர்க் கழியேபோய்
மருளுற்று இராப்பகல் துஞ்சிலும் நீதுஞ்சாயால்
உருளுஞ் சகட முதைத்த பெருமானார்
அருளின்பெரு நசையா லாழாந்து நொந்தாயே.



குறிப்புகள்:—போய்-முழுவதும், மருள்-மோஹம், துஞ்சிலும்-முடிந்தாலும், துஞ்சாய்-உறக்கம் கொள்ளுகிறதில்லை. உருளும் சகடம் உதைத்த பெருமானார்-சகடாசுரவதம் செய்த ஸ்ரீகிருஷ்ணபகவான். அருள் - கிருபை (இங்கு, கிருபைக்குக் காரியமான கலவி) ஆழாந்து - அடியோடே, நொந்தாயே-வருந்தினையே, இங்கு, நீர் வற்றி உருவழிந்தாயே.

பொழிப்புரை: — இருளின் ஸாராம்சம்போலக் கறுத்து நீண்டதூரம் செல்லும் உப்புநீர்க் கழியே, நீ முழுவது மறிவழிந்து இராப்பகல் அடங்கலும் உறங்குகிறதில்லை. நீயும் என்னைப்போல் சகடாசுரவதஞ் செய்த எம்பெருமானோடே கலவியை ஆசைப்பட்டு அது கிடைக்காமையாலே ஆழாந்து தரைப்பட்டு உருவழிந்து நொந்தாயாகாதோ, என்கிறாள்.

குறிப்பு:—விரஹக்குறி - மருளுற்று மடலூர்தல், தூக்கம் ஒழிதல், தரைப்பட்டு உருவழிதல்.

9-ம் பாசுரம்.

நொந்தாராக் காதல்நோய் மெல்லாவி யுள்ளுலர்த்த
நந்தா விளக்கமே நீயு மளியத்தாய் [மான்
செந்தாமரைத் தடங்கண் செங்கனிவா யெம்பெரு
அந்தாமத் தண்துழாய் ஆசையால் வேவாயே?

குறிப்புகள்:— நொந்தாரா - மனவேதனைப்பட்டு ஆராத, காதல்நோய் - ஆசையாகிற நோய், விரஹ வியஸநம். நந்தாவிளக்கமே-இடைவிடாமல் எரிகின்ற விளக்கே, அளியத்தாய் - அருமந்த நீ எல்லாருடைய பரிவிற்கும் பாத்திரமாயிருக்கின்றாய். விளக்கின் சோகத்தில் இப்பிராட்டியும் துயரப்படுகின்றாளென்பது குறிப்பு. மெல்லாவி - தொட்டவர்மேல் பழிவரும்படி நின்ற உயிர். உள் உலர்த்த—முற்றிலும் வறளும்படி உலர்த்த. வேவாயே-அழலால் வேகின்றாய்.

பொழிப்புரை:—"நந்தா விளக்கே, இப் பாடுபடுகைக்கு ஈடின்றி இருக்கும் நீயும் என்னைப்போல் காலதத்துவமெல்லாம் அநுபவித்தாலும் ஆராத காதல்நோயானது உன் மெல்லாவியை உள்ளுலர்த்தச் செந்தாமரைத் தடக்கண் செங்கனிவாய் எம்பெருமான் அந்தாமத் தண்துழாயுள்ளே ஆசையாகிற மஹாக்நியாலே வேவாநின்றாயாகாதோ என்கிறாள்'—ஆறாயிரப்படி.

10-ம் பாசுரம்.

வேவாராவேட்கைநோய் மெல்லாவி யுள்ளுலர்த்த
ஓவா திராப்பகல் உன்பாலே வீழ்த்தொழிந்தாய்
மாவாய் பிளந்து மருதிடைபோய் மண்ணளந்த
மூவா முதல்வா இனியெம்மைச் சோரேலே.

பதக்குறிப்புகள்:—மூவா - கிழத்தனம் இல்லாத, முதல்வா - ஜகத்துக்குக் காரணபூதனே, வேவாரா - வேகுகின்றதை ஒழிக்காத, வேட்கை-காமம். ஓவாது-இடையீடின்றி, மாவாய் பிளந்து - கேசி என்ற ராக்ஷஸன் குதிரைவடிவம் எடுத்து வந்தபோது அவன் வாயைக்கிழித்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவனைக்கொன்றார். மருதிடை போய்-யமனன் அர்ச்சுனன் என்னும் பெயருள்ள இரண்டுராக்ஷஸர்கள் இரண்டுகிளையுள்ள ஒருமரமாகப் பிறந்து கிருஷ்ணபகவான் உயிரைத்தொலைக்கச் சமயமிட்டுக்கொண்டிருக்க அவர்களை ஸ்ரீபகவான் குழந்தையாயிருக்கும்போதே தன் சகடவண்டியை அம்மரத்தின் நடுவே ஓட்டிக் கீழே தள்ளிவிட்டார். அவர்கள், அதனால் இறந்தனர். சோரேலே - கைவிடாதே, சோர்வு - மறதி.

பொழிப்புரை:— "வேவக்கூடாத என்னுடைய மெல்லாவி முடிந்தாலும் தவிராதேநின்று வேட்கை நோயானது வேவிக்கும்படி உன்னுடைய குணசேஷ்டிதங்களாலே என்னை ஒரு க்ஷணமும் விடாதே இராப்பகல் உன் பக்கலிலே விழுந்துகிடக்கும்படி பண்ணினாய். இனி அடியேனைச் சோரவிடா தொழியவேணு மென்கிறாள்"—ஆறாயிரப்படி

குறிப்பு:—கீழெல்லாம் பகவத் விரஹத்தாலே பக்ஷி முதலானவைகளைக் குறித்து அழுது சோகப்பட்டு நின்ற இந்தப்பிராட்டி-(அதாவது உள்ளுறையில் ஆழ்வார்)-இப்பொழுது முன்நிற்கின்றவன்போல் தோற்றிய பகவானை நோக்கிப் பேசுமாப்போல் இப்பாசுரம் கூறுவதேன் என்னில், ஆழ்வார் பட்ட மனக்குறை எல்லாம் தீரும்படி பகவான் எதிர்வந்து தோன்றுகையால், முதல்வா என்று அவனை விளித்து "எம்மை"ச் "சோரேல்" என்று விண்ணப்பம் செய்கிறாள்.

குறிப்பு:—ஆழ்வார் கடற்கரையில் இருந்த நாரையை முதலில் கண்ணுற்றுத் தம் திருவுள்ளம் பகவானின் பிரிவால் துக்கிக்கிறதை அந்நாரைக்கு ஆரோபித்துப் பிறகு திரும்புகையில் பனைமரங்களில் கூடு வைக்கும் அன்றில்பக்ஷியின் தொனிகேட்டு அதை உசாவி, சாயங்காலம் கடலையும் வாடைக்காற்றையும் ஆகாயத்திலோடிய மேகத்தையும் தன்னைப்போலே ஸமதுக்கிகளாகக் குறித்துப் பாடினர். தம் திருமாளிகைக்குத் திரும்புகையில் பிறைச்சந்திரனைக் கண்டு அதுவும் தம்போல் வருந்தியதாகப் பாடிக்கொண்டிருக்கையில் அமாவாசைக்கு முன் சதுர்த்தசி இருட்டுப்பரவ அவ்விருட்டையுங் குறித்து ஸம்போதனம் செய்து, இடையில்கிடக்கும் கழிதரைப்பட்டுஆழ்ந்து நீர் வற்றியதையும் நோக்கி யோர் கவிபாடித் திருமாளிகை புகுகையில் அகத்துள்ள விளக்கைக்கண்டு அதற்காகத் தாம் வருந்தி, காதல்நோய் கூர்ந்திருக்குமனைவர்பொருட்டும் பகவானுக்கு விண்ணப்பம் செய்து அவனது அநுக்கிரஹம்பெற்று நோய்தீர்ந்த ஆழ்வார் திருவுள்ளம் ஆறுதலடைந்ததைப் பத்தாம் பாசுரத்தில் தெரிவிக்கிறார்.

11-ம் பாசுரம்.

சோராத எப்பொருட்கும் ஆதியாம் சோதிக்கே
ஆராத காதல் குருகூர்ச் சடகோபன்
ஓராயிரம் சொன்ன அவற்றுள் இவைபத்தும்
சோரார் விடார்கண்டீர் வைகுந்தம்திண்ணனவே

பதக்குறிப்புக்கள்:—சோராத எப்பொருட்கும்-ஒரு பொருளும்விடாம லகப்பட எல்லாப்பொருள்களுக்கும், ஆதியாம்சோதிக்கு - காரணபூதனனபரஞ்சோதிமயமானவனுக்கு, சோரார் - விடாமல் அநுஸந்திப்பவர். வைகுந்தம் விடார் கண்டீர் என்று அந்வயம்.

"இப்படி எம்பெருமானைப் பிரிந்த வியஸநத்தாலே முடியப்புகுகிற தம்மைஉஜ்ஜீவிப்பதற்காக வந்துதோற்றிய எம்பெருமானைக் கண்டு தாமுஜ்ஜீவித்து அப்படி உயிர்பிழைத்ததினாலே எம்பெருமானின் ஸர்வேச்வரத்துவம் அடைந்து குறைவில்லாமலாகப் பெற்றேன். அதுவே எனக்கு உகப்பு, என்று அவனின் ஸர்வேச்வரத்வத்தை அநுபவித்து அவன்பக்கலிலுள்ள நிர்வதிகமான ஆசையாலே சொன்ன இத்திருவாய்மொழியை விடாதார் ஒருநாளும் எம்பெருமானைப் பிரியார். இது நிச்சயம் என்கிறார்"—ஆறாயிரப்படி.

குறிப்பு:—வைகுந்தம் விடார் என்பது, அதற்கு நிர்வாஹகனை எம்பெருமானைப் பிரியார் என்ற கருத்துடையது. இதுவே ஆறாயிரப்படி தாத்பரியம். இந்தத் தசகத்தின் கருத்து, எம்பெருமானின்றும் பிரிதல் ஒருகணமாத்திரமாயினும் பொறுக்கவொண்ணாது என்பது.

# குறுந்தொகை

[670-வது பக்கத் தொடர்ச்சி]

மதுரையாசிரியர் கோடங்கொற்றனார் } 144 {பாலை

காதலனுடன் கல்லதர்ச்சென்ற மகளின் மென்மையை நினைந்து செவிலித்தாய் இரங்கிக் கூறியது.

கழிய காவி குற்றும், கடல
வெண்டலைப் புணரி யாடியும் நன்றே
பிரிவி லாய முரியதொன் றயர
இவ்வழிப் படுதலு மொல்லாள், அவ்வழிப்
பரல்பாழ் படுப்பச் சென்றனள், மாதோ,
சேண்மழை தவழுஞ் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாடே.

(உரை.)தன்னைவிட்டுப் பிரியாத தோழியராயம் கழியிடத்தனவாகிய கருங்குவளைகளைப் பறித்தும், கடலின் வெண்மையான (நுரையாகிய) தலையையுடைய அலையில் முழுகியும் நன்றாகத் தம்பருவத்துக்கேற்ற விளையாட்டைச் செய்ய அவர்களுடன் இவ்வழிப் போவதற்கும் மனமிணங்காதவள் ஆகிய எனது மடமகள், வானத்துமேகங்கள் தவழும், தலை விண்ணளவுமுயர்ந்து விளங்கும் குறுக்கிட்டுக்கிடக்கும் மலை நாட்டின் அவ்வழியிலே பருக்கைக்கற்கள் தன்காலினழகைக் கெடுத்திட (நடந்து) போயினள். (அதற்கு அவளுள்ளம் எவ்வாறு ஒருப்பட்டதோ?)

புணரி - அலை. பாழ்படுப்ப-அழகைக்கெடுத்துப் பாழாக்க. பிறங்கல் - பிறங்குதல், விளங்குதல். மாதோ - அசை. இது, நல்ல வழிகளையுடைய தன்னூரினருகே தோழிமாரோடு சென்று தனது பருவத்துக்குரிய விளையாட்டுக்களைச் செய்யவும் ஆற்றாத மெல்லியல், பரல்செறிந்த காட்டுவழியில் நெடுந்தூரத்திலுள்ள மலைநாட்டுக்கு ஆடவனொருவனுடன் தன்பருவத்துக்குப் பொருந்தாத காமவேட்கையால் தனியே செல்ல எவ்வாறு துணிந்தனளோ, என்று செவிலி வருந்தியவாறும்.

---

கோல்லன் அழிசியார்] 145 [குறிஞ்சி

தலைமகன் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிய ஆற்றாது வருந்திய தலைமகள் செற்றத்தால் தோழியையும் வேறுபடுத்திக் கூறியது.

உறைபதி யன்றித் துறைகெழு சிறுகுடிக்
கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி
ஆனாத் துயரமொடு வருந்திப் பானாள்
துஞ்சா துறைநரொ டுசாவாத்
துயிற்கண் மாக்களொடு நெட்டிரா வுடைத்தே.

(உரை). உறையும் பதியையன்றிக் கடற்றுறையினிடத்துப் பொருந்திய சிறு குடில்களிலே வாழும் குடிகள்மாட்டும் நெய்தனிலத்தலைவனை தலைமகனது கொடுந்தொழிலை ஏற்றிவிட (புணர்த்திவிட), அதனால் துன்புற்று அமையாத துயரத்தோடு வருந்தி நடுநிசியிலுந் தூங்காதுறையும் மகளிரோடு, அவருடன் ஒன்றும் பேசாமலும் வினவாமலும் துயிலுங்கண்ணையுடையமாக்களையும் உடைத்ததாயிருக்கின்றது இந்த நீண்ட இரா.

'பதியன்றிச் சிறுகுடியிலும் சேர்ப்பன் கொடுமையை ஏற்றி, துஞ்சா துறைநரோடு, உசாவா மாக்களையும் உடையது நெட்டிரா' எனக் கூட்டுக.

'உசாவாத் துயிற்கண் மாக்கள்' எனப் பொதுப்படப் பன்மையாற் கூறினளேனும், இங்குத் தலைமகள் சுட்டியது தன் தோழியை; தலைமகன் தன்னூரிலுள்ள மங்கையரை வஞ்சித்தன்றிச் சிறுகுடிப்பரதவர் மகளாகிய தன்னையும்களவுப் புணர்ச்சி நிகழ்த்திக் கைவிட்டகன்ற செயலுக்கு ஆதியில் உதவி புரிந்தவள் தோழியே யாதலானும், அதனால் கேதமுற்ற தன்னை உசாவித்தேற்றாமலும், தனது துன்பத்துக்குத் தக்க பரிகாரத்தைத் தேடாமலும் கவலையற்று அவள் தூங்குகின்றாளாதலானும், தோழியைச் 'சேர்ப்பன் கொடுமைஏற்றி' என்றும் 'உசாவராத் துயிற்கொள் மாக்கள்' என்றும் தலைமகள் செற்றத்தாற் கூறியதாம்.

கொடுமை - நேயமொழி கூறிப் பேதைமகளிரை வஞ்சித்துத் தன் வயப்படுத்தி மெய்ந்நலனுண்டு பின்பு அவர்களைத் துறத்தல். ஏற்றி - ஏற்ற மாக்களோடு - (உருபு மயக்கம்) மாக்களை; மாக்களையும் என்று உம்மை விரிக்க-"வருத்தம் உசாத்தன் கேளிரைக் காணக் கெடும்" (நாலடி) ஆதலால் அத்தகைய உசாத்துணையையும் பெற்றிலேனென்று அவள் வருந்தியது என்க.

---

வெள்ளிவீதியார்] 146 [குறிஞ்சி

தலைமகன் வரைவொடு விடுத்த வயதுமுதிர்ந்த சான்றோர் வந்து தலைமகளின் தமரொடு சொல்லாடா நின்றுழி, தந்தமர் உடன்படுவரோ, மறுத்திடுவரோ, என்றையுற்றுக் கவன்ற தலைமகளுக்குத் தோழி அவர் வரைவு நேர்ந்தமை புலப்படக் கூறியது.

அம்ம வாழி தோழி, நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்லோ,
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்றுபெரி தென்னு மாங்கண தவையே.

(உரை). தோழீ, நம்மூரில் தலைமகன் மகட் பேசவிடுத்த பெரியாரும் நமது சுற்றத்தாரும் குழுமியிருந்த அந்தக் கூட்டத்தில், (அவர் சொன்னதைக் கேட்டு) இது நன்று, இது நன்று என்று இகழ்ந்துரைத்த மாக்களோடு, இற்றை நாள் நலமிக்க நாளென்று சொல்லி (அன்பிற்கூடித் தலைப்பிரிந்த இருவரை மணவினையிற்) கூட்டிவைக்கும், தண்டேந்தியகையரும், நரைத்த தலையினரும், சிதவல் துணியுடையினருமாகிய முதியோரும் இருந்தார் கொல்லோ? (அவர் கூறிய நன்மொழியாற்றான் நந்தமர் என்னை அவன் வரைந்து கொள்ளுவதற்கு இசைந்தார் கொல்லோ?)

நம்மூர் ஆங்கவணது அவை (க்கண்) பிரிந்தோர்ப் புணர்ப்போர், இன்று பெரிதென்னும் தண்டுடைக்கையர், வெண்டலைச் சிதவலர், நன்று நன்றென்னும் மாக்களோடு இருந்தனர் கொல், என்று கூட்டுக. சிதவல் - சிதறுண்டு கிழிந்த துணி. நன்று, நன்று - குறிப்புமொழி; ironical remark) மிக்க தீது: வெகுளிக்கண் வந்த அடுக்கு. 'மாக்கள்' என்றது தனது தமையன்மார் முதலியோரை.

---

கோப்பெருஞ் சோழனார்] 147 [பாலை

வினைவயிற் பிரிந்து சேணிடைத் தங்கியிருந்த தலைமகன் தலைவியைக் கனவிற்கண்டு துயில் கலைந்தபோது சொல்லியது.

வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன
மயிரோ வொழுகிய அங்கலுழ் மாமை
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்றுயி லெடுப்புதி கனவே;
எள்ளா ரம்ம துணைப்பிரிந் தோரே.

(உரை). இளவேனிற் காலத்து மலரும் பாதிரியின்வளைந்த பூவின் நிறத்தையொத்த கரிய வார்ந்த கூந்தலையும், அழகொழுகும் மாமை நிறத்தினையும், நுட்பான வேலைப்பாடமைந்த பூண்களையுமுடைய தலைவியைக் கொணர்ந்து தந்தாய் போல என்னை இனிய துயிலினின்றும் எழுப்புகின்றாய், கனவே; துணைவரைப் பிரிந்து தனித்துறைபவரே உன்னை இகழ மாட்டார்; (ஏனையோரெல்லாம் இகழ்வார்.)

பாதிரிமரம் இளவேனிற் காலத்து மலர்வதென்பதை 'வேனிற்பாதிரி விரிமலர்' (361).

அவரோ வாரார் தான்வந் தன்றே
அஞ்சினைப் பாதிரி யலர்ந்தெனச்
செங்க ணிருங்குயி லறையும் பொழுதே—(346)

என்ற ஐங்குறுநூற்றுச் செய்யுளாலும், 'சித்திரையிற் பாதிரி பூத்தது' என்ற பொதுமொழியாலும் அறிக. மயிரோ ஒழுகிய - ஒழுகிய மயிர், என்று மாற்றுக. ஓ, ஆசை. ஒழுகிய மயிர், அங்கலுழமாமை, நுண்பூண் மடந்தை என்று தொடர்ப்படுத்துக. துயிலைக் குலைப்பினும் பிரிந்த துணைவரைத் தந்துதவலால் 'எள்ளார் பிரிந்தோர்' என்றான்.' மயிரோ ஒழுகியஎன்பதற்கு 'மயிர்க்கால்கள் தோறும் ஒழுகிய' என்று உரைப்பாருமுளர்.

---

இளங்கீரந்தையார்] 148 [முல்லை

தலைமகன் வருவதாய்க் குறித்துச் சென்ற கார்காலம் வந்தும் அவன் வாராமையால் ஆற்றாது வருந்திய தலைமகள், தன்னை ஆற்றுவிக்கக் கருதி 'இது மெய்யான கார்கால வருகை அன்று, வம்பமாரியே' என்று வற்புறுத்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.

செல்வச் சிறாஅர் சிறடிப் பொலிந்த
தவளை வாஅய் பொலன்செய் கிண்கிணிக்
காசி னன்ன போதின் கொன்றை
குருந்தோ டலமரும் பெருந்தண் காலையும்
காரெனத் தேறா யாயின்
கனவோ மற்றிது வினவுவல் யானே.

(உரை). செல்வத்திற் பிறந்த சிறுவர்களுடைய சிறிய அடிகளின்மீது பொலியும் தவளையின் குரலைப்போன்ற குரலையுடைய பொன்னாற் செய்யப்பட்ட சிறுசதங்கையின் காசைப்போன்ற பூக்களையுடைய கொன்றைகள் குருந்த மரங்களோடு சுழலும் மிகக் குளிர்ந்த காலத்தையும் கார்காலமென்று நீ தெளியாயின், மற்றிது ஒரு கனவு தானோ? நான் உன்னைக் கேட்கின்றேன்; சொல்வாயாக.

தவளை வாய் கிண்கிணி - கிண்கிணி தவளையின் வாயை போன்றிருத்தலை, சிந்தாமணி, 3126ம் பாட்டில் 'தவளைக் கிண்கிணித்தாமம்' என்பதற்கு 'தவளை வாயையுடைய சதங்கை மாலை' என்றும், தவளையின் குரல்போன்ற குரலினதாதலை 2481 ம் பாட்டில் 'தவளைக் குரற்கிண்கிணி' என்றவிடத்து 'தவளைக்குரல் போன்ற குரலையுடைய கிண்கிணி' என்றும் நசசினார்க்கினியர் உரைத்தவற்றால் அறிக. 'வாய்' என்பதை ஆகுபெயராய்க் குரலுக்காக்கி, 'தவளை வாய்க் கிண்கிணி' என்பதற்குத் தவளைக் குரற்கிண் கிணி' என்றே கொள்ளுதல் நேராம்.

---

வெள்ளிவீதியார்] 149 [பாலை

தலைமகன் தன்னையும் உடன்கொண்டு செல்லத் துணிந்ததை தனக்குணர்த்திய தோழிக்குத் தானும் அதற்கொருப்பட்டதைச் சொல்லியது.

அளிதோ தானே நாணே; நம்மொடு
நனியுழந் தன்று; மன்னே இனியே,
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறைத்
தீம்புனல் நெரிதர வீந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைநில் லாதே.

(உரை). நாணம் வெகு நீண்டகாலம் (நம்மை விடாதிருந்து) நம்மோடு வருந்தியது; அதனால் அது நம்மால் அளிக்கப்படத்தக்கதே. (ஆயினும்)வெண்பூவையுடைய கரும்புப் பாத்தியின் உயர்ந்த சிறியமணல் வரம்புகள் இனிய நீர் நிறைந்து நெருக்குவதால் கரைந்தழிந்தாற்போல, எனது நாணமும் காமம் அதிகரித்துத்தள்ளலால் தாங்கிநிற்கக் கூடியமட்டுந் தாங்கிநின்று இப்பொழுது, நில்லாதுடைந்து போயிற்று.

மன்னே இனியே - இப்பொழுது கழிந்து போயிற்று. 'மன்' என்னுமிடைச் சொல் இப்பொருட்டாதலை

கழிவே, ஆக்கம், ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே. (இடை, 4)

என்னுந் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்தால் அறிக. இடைச்சொல்லாகிய 'மன்' இங்கே வினைச்சொல்லாய் வந்தது.

'காமம் நெரிதர நாணே கைநில்லாது மன்னே இனியே' எனக் கூட்டுக.

உயிரினும் நாணம் சிறந்ததாயினும், அதனினும் கற்புச் சிறந்ததாகலின் (தொல் - பொருளதி - களவியல், 22) தன் கற்பைக் காத்தற்பொருட்டு நாணைத்துறந்து தலைமகள் தலைமகனுடன் செல்ல உடன்பட்டாளாம்.

---

மாடலூர் கீழார்] 150 [குறிஞ்சி

தலைமகனுக்கு இரவுக்குறிநேர்ந்து தன்னை அதற்கு ஒருப்படுத்தலுற்ற தோழிக்குத் தலைவி மறுத்துச்சொல்லியது.

சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வாஅன் மீனின் வயின்வயி னிமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுல ரகலம்
உள்ளின் உண்ணோய் மல்கும்,
புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்.

(உரை). (இராக்காலத்தில் பரண்மீதிருப்பவனாகிய) குறமகன் பரணிடத்து மாட்டிய நறுமணத்தோடு கூடிய கொள்ளிக் கட்டைகள் நக்ஷத்திரங்களைப் போல இடந்தோறும் ஒளிவிடும் உயர்ந்த மலை நாடனாகிய தலைமகனது சந்தனப் பூச்சு உலர்ந்த மார்பை நினைப்பின் உள்ளத்து நோய் மிகுவதாகும்; அதனைத் தழுவின் அந்நோய் மாய்வது எப்படி? தோழீ, நீ சொல்.

சேணோன் - உயரத்திலிருப்பவன்; மலைமிசை உறைபவனாகிய குறமகன்; அன்றி மரத்தினுச்சியிலும், பரணின் மீதும் இராக்காலங்களில் தங்குபவன்.'சேணோன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பு' (மதுரைக். 294), 'சேணோனிழைத்த புலியஞ்சிதணம்' (குறிஞ்சிப்—40), 'சேணோன் கையதைப், பிடிக்கை யமைந்த கனல்வாய்க் கொள்ளி' (அகம், 73) என்று பழைய நூல்களில் இது பயின்று வருதல் காண்க. 'நறும்புகை ஞெகிழி,' என்றது அவர்கள் சந்தனக் கட்டையையும், அகிற் கட்டையையுமே கொள்ளிக்கட்டையாக உபயோகிப்பாராதலின். ஞெகிழி - கொள்ளிக்கட்டை. இமைத்தல்-விட்டு விட்டுச் சிறிதொளிவிடல்; twinkling, flickering.

தலைவன் பிரிந்தகன்ற காலத்து அவனை நினைத்தலால் வளராநின்று வருத்துங் காமநோய் அவனைப்பின்னும் அடிக்கடிகூடிப் பிரிவதால் முன்னினுமதிகமாய் முதிர்ந்து வருத்துமேயன்றித்தணியாது. ஆதலால் அவன் இரவுக்குறி வருதலைத் தவிர்த்து, வரைந்து கொள்ளுமாறு அவனை முடுக்குதலே இனிச்செய்யத்தக்கதென்று தலைவி தோழிக்கு உணர்த்தியவாறும்.

---

தூங்கல் ஓரியார்] 151 [பாலை

பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகனை, அவனது அப்பிரிவிடை ஆற்றாது தலைவி இறந்துபடுவாள் என்று சொல்லித் தோழி அவனைச் செலவழுங்குவித்தது.

வங்கர் கடந்த செங்காற் பேடை
எழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழலிசைக் குரல குறும்பல வகவும்
குன்றுறு சிறுநெறி அரிய வென்னுது

189119

மறப்பருங் காதலி யொழிய
இறப்ப லென்பதீண் டின்மைக்கு முடிவே

(உரை). 'வேடர் கையிலகப்படாது தப்பிய செவந்த காலையுடைய பெண்பறவை புல்லூறு என்னும் பறவையால் தாக்கப்பட்டாற்போலத் தனது துணையாகிய சேவலைக் காணாது குட்டைப் பலாமரத்தினமேலிருந்து புள்ளாங்குழலின் இசையையொத்த (மெல்லிய இனிய) குரலால் கத்தும் குன்றுகள் பொருந்திய சிறியவழி கடத்தற்கரியதென்பதை நினைக்காமல் உம்மை மறக்கமாட்டாத காதலியை விட்டுநீங்கித் தனியே போவேன் நான்' என்று தாம் சொல்வது இங்கே அவளது இறந்துபாட்டுக்குக் காரணமான தீர்மானமே ஆகும்.

வங்கர் - (கொலைத்தொழில் புரியும்) சண்டாளர்; இங்கே கொலைத் தொழில் புரிபவராகிய வேடர். வங்கர் கடந்த - (இரண்டாம் வேற்றுமைத் தொகை) 'வங்கர்க்கடந்த' என்றிருக்கவேண்டியது ஓசையின்பம் நோக்கி வல்லினம் மிகாது நின்றது. செங்காற் பேடை - மலைச்சாரலிடத்துப் பலாமரத்திலிருந்து அகவும் என்றதனாலும், 'குழலிசைக் குரல' என்றதனாலும் குயிற்பேடு என்று கொள்ளத்தகும். எழால் - புல்லூறு; ஒரு பறவை.

கணவன் - தனது துணையாகிய ஆண்பறவை. விலங்குகளிலும் பறவைகளிலும் சில நியதியின்றி மனம்போனவாறு புணர்ச்சி புரியாது, மணநெறியிற் றவறுதொழிகும் நன்மக்களைப்போல ஒரே ஆணும் ஒரே பெண்ணுமாகக் கூடிவாழும் இயல்பு நோக்கி இங்கே பெண்பறவையின் துணையாகிய ஆண்பறவையைக் 'கணவன்' என்று உபசரித்துரைத்தார். பலவு - பலா. அகவும் - கூவும், கத்தும். குன்றுறு சிறுநெறி - கல்லதரத்தம். இறப்பல் - நான் கடந்து செல்வேன். இன்மை - இறந்துபடுதல்; non - existence.

களவொழுக்கத்துக்காலை நேர்ந்த பல இடையூறுகளையும் ஒருவாறு கடந்து நன்மணம் புரிந்து இல்லின் கண் அமர்ந்த காலத்தும் தன்னைவிட்டுத் தன் காதலனைப் பிரித்துத் துன்புறுத்திய வினையை நினைந்து வருந்துந் தன்னிலையைத் தலைவி,'வங்கர் கடந்த செங்காற் பேடை எழாலுற வீழ்ந்ததற்கு ஒப்பிட்டுரைத்தாள்.

---

கிளிமங்கலம் கிழார்] 152 [குறிஞ்சி

களவொழுக்கத்தினிடையில் பலகாரணத்தாலும் நேர்ந்த தலைமகன் பிரிவு நீட்டித்தவழி ஆற்றாது வருந்திய தலைமகள் தன்னைக் கட்டுரைகழறித் தேற்றிய தோழிக்கு முன், னிலைப்புறமொழியாகக் கூறியது.

யாவது மறிகிலர் கழறு வோரே;
தாயில் முட்டை போலவுட் கிடந்து
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தோ,
யாமைப் பார்ப்பி னன்ன
காமம் காதலர் கையற விடினே.

(உரை). (நிறையழிந்து இவ்வாறு வருந்தாதே, வருந்தாதே; ஆற்றியிரு, ஆற்றியிரு என்று பலகாலும் என்னை) இடித்துரைப்பவர்கள் காமத்தின் தன்மை இன்னதென்பதை ஒன்றும் அறிந்திலர். ஆமையின் பார்ப்பு (வளர்வதற்குத் தாயின்) பார்வை (இன்றியமையாதவாறு) போலக் (காதலனும் காதலியும் ஒருவரையொருவர் பார்க்கும்படி சமீபத்திலிருத்தலை) இன்றியமையாதகாமம், காதலர்என்னை அறவே கைவிட்டிடின், அடைகாக்குந் தாயில்லாத முட்டையினகத்துள்ள கருவைப்போல வளராது உள்ளே கிடந்து அழுவதன்றி வேறு யாது பயனை உடையதாகும்?

சாய்தல் - அழுதல், கெடுதல். யாமைப் பார்ப்பு-தன்னெதிரில் வைத்து அடிக்கடி கண்ணாற் பார்த்துத் தன்பிள்ளையை வளர்த்தல் தாய்ஆமையின் இயல்பாதலை

தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத்
தாய்முக நோக்கி வளர்ந்திசி னாஅங்கு-(ஐங்குறு - 44)

என்பதால் அறிக. பார்ப்பு வெளிப்படுமுன் முட்டையைப் பாதுகாத்து வளர்த்தல் ஆண்யாமையின் தொழிலென்று

நிறைச்சூல் யாமை மறைத்தீன்று புதைத்த
... ... புலவு நாறு முட்டைப்
பார்ப்பிட னாகு மளவைப் புகுவாய்க்
கணவன் ஓம்பும்— (160 - ஐங்குறு)

என்ற அகப்பாட்டால் தெரிகின்றது.

பார்ப்பு - பறவை, தவழ்வனவாகிய ஆமை, முதலை முதலியவற்றின் பிள்ளை.

பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை - (மரபி - 4)
தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன - (மரபி - 5)

என்பன தொல்காப்பியச்சூத்திரம்.

'கையறவிடினே' என்பதை 'அறக்கைவிடினே' என்று மாற்றிக் கொள்க. கையறவு - கையாறு, செயலற்றுப் போதல், உண்டாம்படி விடின், எனவும் பொருள் காணலாம்.

---

கபிலர்] 153 [குறிஞ்சி

வரைந்து கொள்ளாது நாளும் இரவுக்குறிக்கண்வந்து தன்னைக் களவிற்கூடிப் பிரியாநின்ற தலைமகனுக்கு இதனைச் சொல்லி இரவுக்குறி மறுத்து வரைவு கடாவுகவென்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

குன்றக் கூகை குழறி னும், முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளி னும்
அஞ்சுமன் அழித்தெ னெஞ்சம் இனியே;
ஆரிருட் கங்கு லவர்வயிற்
சார னீளிடைச் செலவா னாதே.

(உரை). இனி நம்வீட்டின் முன்பக்கத்துள்ள (மராமரத்தின்மேலிருந்து) கூகை குழறினும், பலாமரத்தின் பெருங் கிளையின்மீது முசுக்கலை பாய்ந்து குதித்தாலும் எனதுள்ளம் அஞ்சி அழியும்; இருள் செறிந்த இரவில் மலைச்சாரலில் சேய்த்தான குறியிடத்தில் அவர்மாட்டுப் போகும் விருப்பமோ அமையாது. (ஆதலால், இரவுக்குறிமறுத்து, வரைந்து கொள்ளுமாறு அவரை நீ முடுக்குவாயாக.)

'முன்றில்' என்பதை முன்னும் பின்னுங்கூட்டுக. கலை-முசுக்கலை, ஆண்குரங்கு. பாய்தல் - ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குத் தாண்டுதல்; leaping. உகளுதல்— துள்ளிமேலெழுந்து கீழ்விழுதல்; jumping. மன் அசை. அழித்து - அழிந்து; 'அஞ்சும் அழித்து' என்பதை 'அஞ்சி அழியும்' என்று மாற்றுக. ஆர் இருள் - நிறைந்த செறிந்த இருள்; அரிய இருள் என்றுமாம். செலவு - ஆகுபெயர். ஆனாது - அமையாது, அடங்காது. தணியாது.

இருள் செறிந்த இரவிலேகுறியிடத்துச் செல்வதென்றால் கூகை குழறுவதையும், குரங்குபாய்வதையும் கேட்டு எனதுள்ளம் அஞ்சுகின்றது; போகாமலிருந்து விடலாமென்றால் அதற்கும் என்மனம் உடம்படுகிறதில்லை; இவ்வாறு நான் இருதலைக்கொள்ளி எறும்பின் அவத்தைப் படுகின்றேன் என்றாளாம். 'அஞ்சும்' என்பதற்குத் தலைமகனுக்கு நேரும்ஏதங்குறித்துத் தான் அஞ்சினதாகவும் கொள்ளலாம்.

---

மதுரைச் சீத்தலைச்சாத்தனார்] 154 [பாலை

பொருளீட்டக் கருதிப் பிரிந்த தலைமகனை நினைந்து வருந்திய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

யாங்கறிந் தனர்கொல் தோழி, பாம்பின்
உரிநிமிர்ந் தன்ன உருப்பவி ரமையத்
திரைவேட் டெழுந்த சேவ லுன்னிப்
பொறிமயி ரெருத்திற் குறுநடைப் பேடை
பொரிகாற் கள்ளி விரிகாய்ங் கவட்டுத்
தயங்க விருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பிற் கானம்
பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே.



(உரை). தோழீ, சூரியகிரணங்களின் வெப்பம் பாம்பின் சட்டை பரந்தெழுந்தாற் போல விளங்கும் கடுங்கோடைக் காலத்தில் இரையை விரும்பிப் பறந்து சென்ற சேவலை நினைந்து புள்ளிகளையுடைய மயிர் செறிந்த கழுத்தையும், குறுகிய நடையையுமுடைய பெண்புறா பொரியரைக் கள்ளியின் தலைவிரிந்த காய்ந்துலர்ந்த கிளையில் விளங்கவிருந்து வருந்திக்கத்தும் போதற்கரிய சுரமாகிய கானத்தைக் கடந்து சென்று தூரமான நாட்டின்கண் தங்கவல்லவராகிய நங்காதலர் நான் படுந்துன்பத்தை எங்கே அறிந்தார்?

உரி - பாம்பின் சட்டை; the thin outer layer of skin or the slough which a snake casts of. உருப்பு-வெப்பம்; உருப்பவிர் அமையம்-முதுவேனிற் காலம். பொறிமயிர்' 'குறுநடை' என்ற அடைகளால் 'பெடை' என்பது பெண் புறாவென உரைக்கப்பட்டது. காய்ங்கவடு - காய்கவடு, (வினைத்தொகை); மெல்லொற்று விரித்தது விகாரம். கூஉம் - கூவும்.

'பொருளையே பெரிதாக மதித்து நம்மைவிட்டுப் பிரிந்து, கடத்தற்கரிய கொடுஞ்சுரத்தையுங் கடந்து, அவ்வாறு கடக்கும்போது அங்கே பிரிந்ததன் சேவலை நினைந்து பெண்புறாக் கத்துவதைக் கேட்டும் தன் மனமிரங்காமல் நெட்டிடைச்சென்று பிறநாட்டில் நெடுங்காலம் தங்கவல்ல வன்கணர், என்பாள் 'உறைதல் வல்லுவோர்' என்றும்' 'இத்தகைய வன்கணர் பிறர்படுந் துயரத்தை நினைக்கவுமாட்டார், களையவுங் கருதார்' என்பாள் 'யாங்கறிந்தனர்' என்றும் தலைவி கூறினளாம்.

---

ஓரோடகத்துக் கந்தரத்தனார்] 155 [முல்லை

போர்வயிற் பிரிந்த தலைமகன் மீள்வதாகக் குறித்துச் சென்ற கார்ப்பருவ வரவின்கண் அவன் வாராமையால் அந்தி நேரத்தில் வருந்தியழிந்த தலைமகள் நொந்து கூறியது.

முதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுள
பொழுதோ தான்வந் தன்றே, மெழுகான்
றாதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயி லிறும்பி னார்ப்பச் சுரனிழிபு
மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரு மென்னுமுன் னுரைவா ராதே.

(உரை). மாலைப்பொழுதிலே (என் காதலருக்கு இன்பமாகிய) நல்விருந்தை நான் அளிக்குமாறு, மெழுகிற் கட்டி (கஞ்சகாரன்) ஊதுலையிலிட்டு (உருக்கி) வார்த்த அகன்ற வாயையும் தெளிவான ஓசையையுமுடைய மணிகள் மரங்களடர்ந்த இளமரக்காவிலே ஒலிக்கும் வண்ணம் சுரத்தைக் கடந்து (அவரது) தேர் வருமென்று முன்னறிவிப்பு வார்த்தையொன்றும் வாராமலே, பழங்கொல்லையை உழுது விதையை விதைத்து மீளும் ஆரவாரத்தையுடைய உழவரது விதைவைக்கும் சிறுகூடை (அக்காலத்துப்) பூக்களால் நிரம்பும்படி கார்காலம் மட்டும்தான் முந்தி வந்தது.

முதைப்புனம் - முல்லை நிலக்கொல்லை. கொன்ற - நிலத்தையுழுது, வெட்டிப் பண்படுத்திய. ஆர்கலி - நிறைந்த முழக்கம், ஆரவாரம். குறு - சிறிய. வட்டி - கூடை, a wicker basket. போது - முல்லை நிலத்துக்குரிய காயா, குருந்தம், கொன்றை, முல்லை, தளவு. பொதுள - நெருங்க. தெண்மணி-தெளிவானமணி, a bell with a clear, ringing tone. இறும்பு - இளமரச்சோலை; மலை, சிறுமலை என்றுமாம். 'மஞ்ஞையாலும் மரம்பயிலிறும்பு' என்பது பத்துப் பாட்டு (பெரும்பா-495). சுரன் இழிபு - சுரத்தினுட் புகுந்து அதைக்கடந்து. விருந்து அயர்மார் - (நான் அவருக்கு) விருந்திடுமாறு; இங்கு விருந்தாவது பசிப்பிணி நீங்க வாயாலுண்ணும் உணவேயன்றிக் காம வேட்கை தீர ஐம்பொறிவாயிலானும் நுகரும் இன்பம்.

நேரிறைப் பணைத்தோட் கார்விருந் தாக
வடிமணி நெடுந்தேர் கடைஇ
வருவ ரின்றுநங் காத லோரே —(ஐங்குறு - 468)

என்றார் பிறரும். முன்னுரை - முன் அறிவிப்பு; previous intimation. வாராது - வாராமல் (வினையெச்சம்; முன்னுரை வாராது பொழுதோ தான் வந்தன்றே,என்று வினை முடிக்க.

---

## தமிழ்ப் பாடம் 136.

[672-வது பக்கத் தொடர்ச்சி]

### நைடதம்—நளன் தூதுப் படலம்

மலர்பயில் வாவிதோய் மாதர் நுண்டுகி
லலைபுன னனைதலு மல்குறோன் றலாற்
கலைவலான் கண்முகிழ்த் தேகக் காண்குறான்
முலைமுக டழுந்துற வொருத்தி முட்டினாள். 84

(உரை). மலர் - மலர்கள், பயில் - நெருங்கியுள்ள, வாவி-குளத்தில், தோய் - முழுகி விளையாடும், மாதர் - மாதர்களுடைய, நுண் - மெல்லிய, துகில் - வஸ்திரங்கள், அலை - அலைகளையுடைய, புனல்-நீரால், நனைதலும் - நனைந்ததால், அல்குல் - அல்குல்தடமானது, தோன்றலால் - தென்படவே, கலைவலான் - கலைகளில் வல்லவனாகிய நளன், கண்முகிழ்த்து - தன் கண்களை மூடிக்கொண்டு, ஏக-நடந்ததால், காண்குறான் - (எதிரேவருபவரை) காணமுடியாதவனானான். (இங்கிலையில்) ஒருத்தி-(எதிரேவந்த) ஒரு பெண், முலைமுகடு - அவளது முலையின் உச்சி, அழுந்துற - (நளன் மார்பில்) நன்றாக அழுந்தும்படி, முட்டினாள்-முட்டிக்கொண்டாள்.

விரிவுரை:— காதலால் தன்னையேதுறந்த வள்ளலை, அவன் காதற்குரியாளையும் துறக்குமாறு தூதுபோக்கும் கவிவரர், தூதுவன்மனங் களைக்கவும் படிப்பவர் மனங் களிக்கவும் குறும்புசில புரிகின்றார். அமரர்கோனுதவிய மந்திரத்தால் யாவர்கண்ணிற்கும் நளன்புலனாகானதலால் வாவிதோய்ந்தாடுவாரும், கரைதனில் பயில்வாரும் அப்பொழிலினூடே எழில்நளன் படராலாவதைக் கண்டாரலர். எனவே மங்கையர், தம் அல்குல்தடம் தெரியுமாறு வாவிநீர் புரிந்த சதியையும் கவனியாதுஉவகையின் ஆடினர். எல்லாக்கலைகளிலும் தேர்ச்சி மிகப்பெற்ற நளனது தூயமனம் இக்காட்சியைக்காணக்கூசிற்று. உடனேகண்களைமூடிக்கொண்டு தன்னெறி படரலானன். ஆனல் மன்னவன் மதி வகுத்த சூழ்ச்சி பயன்படவில்லை. அல்குலைப் பார்க்கலாகாதென்று மூடிய கண்கள் மங்கையொருத்தியின் முலைமுகடு அவன் மேல் அழுந்தும்படி செய்தன.

காமுறு மொருத்திதன் வதனங் கண்டகண்
கோமகன் முகிழ்த்தலாற் கோதை மார்முக
மாமதி யென்பது மன்னன் செய்யகண்
டாமரை யென்பதுந் தக்க வாயவே. 35

(உரை). காமுறு - விருப்பம் தருவதற்குரிய அழகையுடைய, ஒருத்திதன்-ஒருபெண்ணினுடைய, வதனம் - முகத்தை, கண்ட - பார்த்த, கண் - தனது கண்களை, கோமகன் - நளசக்ரவர்த்தி, முகிழ்த்தலால்- மூடிக்கொண்டதால், கோதைமார் முகம் - மாதர்களுடைய முகத்தை, மாமதிஎன்பதும் - பூரணசந்திரன் என்பதும், மன்னன் - நளனுடைய, செய்ய - சிவந்த, கண் - கண்களை, தாமரை யென்பதும்-தாமரை என்று சொல்வதும், தக்க - தகுதியுடையன, ஆயவே - ஆய்விட்டனவே.

விரிவுரை:—மூடியகண் இப்படி வஞ்சிக்கவே, கண்ணைத்திறந்து செல்வதே நேரிதென்று கருதினனாய் நளன் மேல்நடக்கலானான். அங்கும் எழிலுடைநங்கை யொருத்தி யெதிர்வந்தாள். தான் வரைந்துகொள்ளாத மாதரனைவரும் உடன்பிறந்தார் என்று நினைக்கும் சிந்தையனான நளன், அவளைப் பார்ப்பது தவறெனக் கொண்டு மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். இந்நிகழ்ச்சியை ஒரு நிபமாகக் கொண்டு கவிவரர் கற்பனையொன்று தன்மனத்தொடு பிறர்மனமும் உவகையால் ஊக்கப்பெறுமாறு அமைக்கின்றார். ‘மாதரார்முகத்தைச் சந்திரனென்றும் மன்னவன் கண்ணைத் தாமரை என்றும் எல்லோரும் சொல்வதின் உண்மையை ஈண்டுக் கண்டேன். சந்திரனைக் கண்டதும் தாமரை மூடிக்கொள்வதுபோல், அந்நங்கையைக் கண்டதும், அவன் கண்களும் மூடிக்கொண்டன. எனவேநளன் தாமரைக் கண்ணன் என்பதும், மங்கையர் மதிமுகத்தார் என்பதும் தகுதியே ஆயின; என்று தேர்கின்றார் கவி.

குறிப்பு:—சந்திரன் தோன்றியதும் தாமரை முகிழ்ப்பது இயற்கை. இப்பொழுது மன்னவன் கண்கள், எதிர்ப்பட்ட நங்கையின் முகத்தைக் கண்டவளவில் மூடிக்கொண்டன. எனவே அவள் முகத்தைச் சந்திரனென்பதும் இவன் கண்களைத் தாமரையென்பதும் தகுதியேஎன்பது ஐயமிலாவகை நிச்சயமாயின. ஆதலால் இது தகுதியணி எனப்படும். இவ்வணியின் இலக்கணம் 3வது வால்யூம், 34வது இதழில் 671-வது பக்கத்தில் விரிவாகக் கூறப்பட்டுளது.

---

செய்யகண் முகிழ்த்திடல் விழித்த நீதெனு
வையனுங் கடைக்கணு னோக்க வன்பிதென்
றெய்யும்வேள் கணைமல ரிதய மோர்ந்துமால்
பொய்யென வருச்சனை புரிதல் போன்றதே. 36

(உரை). செய்ய - சிவந்த, கண் - கண்களை, முகிழ்த்திடல் - மூடிக்கொள்ளுதலும், விழித்தல் - விழித்துக் கொண்டு செல்லுதலும், தீது எனு - தீமையாக விருக்கின்றது என்று நினைத்தனனாய், ஐயனும் - நளமகாராஜனும், கடைக்கணால் நோக்க - கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டு செல்லவும், அன்பு இது என்று- காமவிருப்பினால் இது நிகழ்வது என்று கொண்டு, வேள் - மன்மதன், எய்யும் - விடுத்த, மலர்க்கணை - புஷ்ப்பபாணமானது, இதயம் ஓர்ந்து - மன்னனது மனத்தூய்மையைத் தெரிந்துகொண்டு, மால்-(கடைக் கண்நோக்கம்)காமமயக்கம் என்பது,பொய்என-பொய் யென்று கண்டு, அருச்சனை - பூசை, புரிதல் போன்றது - செய்வதுபோ லாயிற்று.

விரிவுரை:—கண்ணை மூடினாலும் திறந்தாலும் தீதாக முடிவதால் நளன் தான் போகும்நெறி தெரியுமளவு கடைக்கண் திறந்து பார்த்துக்கொண்டு போனான். கடைக்கண் பார்வை காமத்தின் குறியாதலால் இம்மாதர்பால் மையலே கொண்டானிந்நளன் என மயங்கிய மன்மதன் மலர்வாளிதூவத் தலைப்பட்டான். அவன்விடுத்த மலர்க்கணைகளோ, “இடந்தெரியாது ஏவினனே. விருப்புச் சிறிது உற்றார்பால் விடுத்தால் அன்றோ பயனுண்டு. இப்பெருந்தகையின் மனமோ தூயது. எனவே இவனை வழிபடுவது அல்லால் வேறொன்றும் செய்வதற்கில்லை” என்று அவனுக்கு அருச்சனை செய்தனவாம்.

---

தெரிவையென் றுருவெளி யோடு செப்பிய
வரசன துரைய சரீரி யாமென
வெருவிய மாதர்சொற் கேட்டு வெள்குறா
வுருவெளி யிதுவென வுள்ளந் தேறினான். 37

(உரை). தெரிவை என்று - தமயந்தி என்று, உருவெளியோடு - உருவெளித் தோற்றத்தோடு, செப்பிய- சொல்லிய, அரசனது உரை - நளனுடைய சொல்லை, அசரீரிஆம் என - இது ஆகாயவாணியின் சொல் என்று நினைத்து, வெருவிய-அச்சமுற்ற, மாதர்சொல் கேட்டு-மாதர்சொல்லைக் கேட்டு, (நளன்) வெள்குறா - வெட்கமடைந்து, (பின்) இது உருவெளி என்று- தான்கண்ட தமயந்தி உருவெளித் தோற்றமென்று தெளிந்து, உள்ளம் தேறினான் - மனந்தேர்ந்தான்.

விரிவுரை:—தமயந்தியின் நினைவொன்றே நிலைத்த மனத்தவனாயிருக்கின்றான் நளன். உள்ளத்தே ஊன்றித் துளங்குமெண்ணம் உருப்பெற்றுப் புறத்தே தோன்றுவது இயற்கை. தமயந்தியின் உருவம் இப்பொழுது அவனுடைய உள்ளத்தைவிட்டு வெளி வந்து அவன்கண்முன் ஆடுகின்றது. இதுபொய்த் தோற்றம் என்றுணராமல் அவ்வுருவெளியுடன் பேசுகின்றான். தன்னுருவம் மறைத்திருக்கின்ற நளனது பேச்சொலியை மாத்திரம் அயலிருந்தமாதர் கேட்டு, ‘இது அசரீரியோ’ என அஞ்சித் தம்முள்ளே பேசிக் கொள்கின்றனர். இவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டபிறகே,தான் உருவெளியைத் தமயந்தி யென்று மயங்கிய பொய்ம்மையை உணர்ந்து நளன் வெட்கப் படுகின்றான்.

உருவெளித்தோற்றத்தின் இலக்கணம் முன்(1வது- வால்யூம், 407வது பக்கத்தில்) கூறப்பட்டிருக்கின்றது.



# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[674-வது பக்கத் தொடர்ச்சி]

### அறத்தினைக் காக்கவோ வரத்தினை வேண்டினாள்.

மூதனூன்முனிவரும் வழிநூற்புலவரும் கைகேயியின் மனநிலையைப்பற்றி வழங்கியுள சொற்களின் குறிப்பினால், கற்புக்கடனாற்றுங் கொள்கையிற்றானே அவள் தலைநின்றனளென்ன அவர் எண்ணினா ரலரென்பது உறுதியாகின்றது. இராமன்பா லன்பும் மன்னவன்பால் பரிவுமுடைமை அவளுக்கு உண்மையாயின் வெகுளியும் உவகையும் எழுதற்குச் சிறிதேனுமிடமில்லை. புழுங்கிய மனத்தளாய் அழுங்குவதே அவள் நிலைக்கு உரியதாகும். இதனுண்மையை நாடகவுணர்ச்சி நனியுடைய ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரும் ஓர்ந்துகொண்டனர் என்பது,

“தசரதனின் இப்புதுநிலை அவள் செவ்விய மனதைக் கவ்விப் புண்படுத்தியது. இதுவரை கருதிலாப் புதுநிலை தன்கணவன்பாற் காண மாழ்கி மனமுடைந்திடைந்தாள். தன்னுளமுறைந்த தலைவ னறவுருவப்படம் அவன் மருட்கைச் செயலெழுப்பிய இருட்புகையுண்டு மாசுபடவும், மங்கை உயிரற்ற ஓவியம்போலுணங்கிக் கோடிழந்த கொடியென்ன மறுகலானாள். தலைவன் தவற்றாற் றறியுண்டு தளர்ந்த உணர்வினள்,பின் தன் அறவுளத் தறிவு தெருட்டத் தேர்வாள்......”

என அவர் நூலின்கண் பயின்றுள சில வாக்கியங்களால் நன்கு தெரிகின்றது. கைகேயிக்கு அவர் கற்பிக்குங் கருத்திற்குரிய மனநிலை இன்னதேயென உய்த்துணர்ந்தபின், இதற்கு மாறாய மனநிலையே அவள் எய்தினின்றனள் என இருபெரும் புலவர்களும் தெற்றெனக் காட்டியிருப்பதைக் கொண்டு இவர் தம்முடைய முடிவை ஆராய முயலாதது மிகவும் வியப்பே. பின்,

“மன்னறத்தையுந் தன்னையும் வஞ்சித்து வேந்தன் மேற்கொண்டுநின்ற செயல் கண்கூடாக் கண்டபிறகு, மந்தரையை வைது பயனில்லை யென்றுணர்ந்தாள். தென்னெஞ்சி லறநிலை தலைநின்ற காதற் கணவனின் வீழ்ச்சி காணப்பொறாது னைந் துளமயர்ந்த தேவி, உற்றது முறுவது மெண்ணித் தெளியலுற்றாள்.”

எனத் தொடர்கின்ற வாக்கியத்தில், ‘மந்தரையை வைது பயனில்லை’ என்றவளவில் கைகேயி நின்றுவிட்டாள்போல் ஸ்ரீமான் பாரதியார் மெல்லெனக் கூறுமிது, மந்தரையை அவள் பலபடப் போற்றிப் பாராட்டிஅக் கூனிற்கோர் கும்பிடும் இட்டு வழிபட்டபரிசு கூறும் வான்மீகர் வரலாற்றையும், நகைமுகங் காட்டி அவ்வுள்ளமுங் கோடிய கோடியாளை உயிருறத்தழுவி அவள் பாழ்த்த கைகளில் பரதனை அடைத்த புன்மையைக் காட்டும் கம்பர் சித்திரத்தையும், மறந்ததால் நேர்ந்ததென நினைத்த லருமை.

உற்றது முறுவது மெண்ணிக் கைகேயி தெளியலுற்றாள் என்கின்றார் ஸ்ரீமான் பாரதியார்.உற்றதென்பது முன்னுரைத்த அச் சுல்கச்சூளைக் குறிப்பதாயின் அஃதொருவாற்றானும் அமையாமை கண்டோம். வான்மீகர் கூனியின் வாயில் அதனையுட்கொண்டு உணர்த்துதற்குரிய சொற்கள் யாதும் பெய்திலர். கைகேயியும் அதனை நினைத்தே விவகரித்தனள் என்று இருபுலவர்களும் இயம்பாததுடன், கம்பர் இமையவர் மாயம் அரக்கபாவம் முதலிய வேறு காரணங்களால் கைகேயியின் மனம் திரிந்ததென்று விண்டனர். இதுவுமன்றிக் கைகேயியின் மனக்கோள் மெய்ப்பாடுகளை இவ்விரு புலவர்களும் விளக்குகின்ற தகுதிநோக்கின் அவை, அறத்தாறொழுகலே கருத்துடை யொருத்தியின் மனக்கோள் மெய்ப்பாடுகளுக்கு மாறாயிருத்தலும் வெளிப்படை. இனி, ‘உறுவதும் தெளிந்து அவ்ள் ஆவன ஆற்றினாள்’ என்று ஸ்ரீமான் பாரதியார் உரைப்பதுவும் அமையுமோவெனச் சிறிதிங்கு ஆராய்வோம்.

இராமனுக்கோரிடையூறுசெய்து,பரதனுக்கும்தனக்குமோர்பேராக்கம் நாடினாள் அல்லளாயின் கைகேயி மன்னவன்பால் நேரே சென்று சுல்கப் பிரதிக்ஞையின் உண்மையை உறவுறச் சொல்லி ‘இத்தீமையைத் தவிர்க’ எனத் தன் கருத்தியற்றி முடிக்காது, சம்பரனைச் செற்றநாள் பெற்றவவ் விருவரங்களை நிபமாய்க் கொண்டு தன் நினைவினைச் சாதிக்க முயல்வானேன் என்றும், நீங்காத அன்பு அவளுக்கு இராமன்பால் நிலைத்ததாயின் அவனை வனத்தகம் புகுத்தியே பரதனுக்குப் பட்டத்தைச் சூட்டிவைத்தல் எவ்வகையில் இன்றியமையாததாயிற்றென்றும் சிலர் ஐயுறவெய்தலாம் என்பதையுன்னி ஸ்ரீமான் பாரதியார் விளக்குகின்ற வாக்கியங்கள் தர்க்கமுறைத் தொடர்ச்சியாலும் மானுடவியற்கை நவிற்சியாலும் சொன்னயச் செறிவினாலும் மிகவும் செவ்வியவாய் அமைந்திருக்கின்றன. ஓதி மகிழ்வதற்குரியதாகிய அப்பாகம் அவர் நூலினின்று ஈண்டெடுத்து வரையலாகின்றது:—

“அரசன் இராகவனுக்கு முடிசூட்டுவதாக அனைவருக்கும் அறிவித்துவிட்டான். உழைஞரும் குடிகளும் விழவுகாணக் குழுமியதோடு, தூய முனிவரும் நேயரிருபருமாய பலப்பலர் ஆண்டுவந் துற்றுளார். குறித்தபடி இராமன் கோமுடி சூடாமற் றடுப்பதை யறனுக்கண்ட கைகேயி இந்நிலையிற் செயத்தகுவது என்னை? உண்மையை வெளிப்படுத்திக் கணவன் சொல்லறம் பேணுவதொன்று, அன்றிக் கையறவு பூண்டு தான் வாளா விருப்பதொன்று; இரண்டும் தேவி தூயசிந்தைக்கு உகந்தவன்றே. குறித்த திருநாளை வெறு நாளாக்காவிடின் தசரதன் பழியொடு பாவமேற்பது சரதமெனத் தெளிந்தபின், யாதுசெய்தும் அறந்திறம்பா தவனை நெறிநிறுத்தல் நிவிர்த்தியற்ற முதற்கடனாக் கொண்டாள். எனினும், உண்மை வெளிப்பாட்டுக்குத் தானுடம்படுவது, காக்கக்கருதிய பழியைக் கணவனுக்குச் சேர்ப்பிக்கும் உறுதி வழியாமெனக் கண்டாள்; என் செய்வாள்? இராமன் முடிசூடில், தசரதன் சூளறங்கொன்ற பாவத்திற்கு ஆளாவன். அதைத் தடுக்கக்கருதி அவன் மரபுடைய முன் ‘சுல்க’ப் பிரதிக்ஞை அறச்சொல் லுண்மையை வெளிப்படுத்தின், இராமன் அபிஷேகமட்டும் நடவாது நிற்கும்: ஆனால், ‘தன் சொல்லறமறந்து நெறிதுறந்து முறையிறந்தான்’ என்னும் பழியினின்றும் தசரதன் தப்புமாறில்லை. தன்மகனுக்கமே இராமாபிஷேகத்தை நிறுத்தத்தேவியைத்தூண்டியிருப்பின், ஒருகால்தான் முன்னைய ‘சுல்க’ச்சூளும் அதனாற்பரதன்பிறப்புரிமை வரலாறும்கூறி அவனுக்குஅரசுபெற முயலக்கூடும். பரதன்பாற் பரிவுபற்றிக் கைகேயி அரசிரக்க நினைத்தாளல்லள்;நினைக்கவு மொல்லள்,’ என்பதைமேல் அவள்குணநலங் குறித்த பல கவிகளால் ஆராய்ந்து தெளிந்தோம். காதற் கிழவனைப் பாவமும்பழியும் அணுகாவாறு காத்தலொன்றே, அவள் கற்புறுசிந்தைக் காதற்கருத்து, உண்மை வெளிப்ப

டின், மூன்னாளின் மன்னவன் கேகயனிடம் அறச்சூள்செய்த தறியா மாந்தர்பலரும், 'அம்மரபுடைச் சொல்லறந் துறந்து கழிபெருங்காதன்மிகையால் தன் முதன்மகனான இராமனுக் குத் தசரதன், தனக்குரிமை யில்லாது, பிறந்துரிய பரத னுக்குடைமையாகத் தனியரசை, அவனைநாடகற்றி அவனில் லாதபோது அளிக்க முயன்றனன்', என்று அரசனைப் பழிப்பதற்கு இடனும். தாசரதி முடிசூடு விழவைத் தான் தடாதவரை பாவமும், உண்மைசொல்லித் தடுப்பின் பழி யும், தசரதனைச் சாருவதாகும். தன் கணவனுக்கு எவ்வகை யூறும் எவ்வமு மின்றிக் காப்பதையே காதனிறைக் கடனாக் கருதியுள்ள கைகேயி, இவ்விரண்டுக்கும் உடம்பட இசை கிலள். மன்னரும் மற்றைமக்களும் வந்து கூடியபின், என்ன சொல்லி இராமாபிஷேகத்தை நிறுத்தித் தன் காதலன் புக ழொடு சொல்லறமும் நிறுவலாகுமென்பதே அவள் மனங் கவர்ந்த கவற்சியாகும். தக்க நியாயங்கூறினன்றிக் குறித்து வைத்த முடிசூட்டு விழாவைத் தடுக்குமாறில்லை.

தசரதன்தவறு தக்கதோர் கழுவாய்*அல்லது பரித்தியாக ம்பெறினன்றித் தீருவதன்று. பாவமெனைத்தேனும் அதற்கு ரிய வொறுப்பின்றிக் கழிவதில்லை. முதுமையில் முதற்பெற்ற மகவாசை மயக்கத் தன் சொல்லறந்துறந்த தசரதன்பாவத் துக்குப்பழி யவனை யடையவேண்டும்; அன்றேல், அவற்கினி யார் பலிபெற்று அவரையேனும் சாரவேண்டும். கணவனறத் தைப் பேணுவதிற் பழி அவனைச்சாராமல் தான் தாங்கக்கூடு மாயின், அதனினுங் கைகேயி காமுறுவ துலகிலில்லை. பொருகளத்தும் புரவலனைப்பிரிந்திருக்கச் சகியாது அவன் தேரிற் சாரதியாயமைந்து, சமயநேரிற் தன்னுயிரு மவன் வெற்றிக்குப் பலிகொடுக்க, மணந்த சிறுபருவத்தே துணிந்து நின்ற நிறைகாதல் நிறையுடையாள்; முன்வேட்டவன் வெற்றிக் குயிர்கொடுப்பாள், இன்றவனறப்பெற்றிக் குயிரி னுமோம்பத்தகுந் தன்புகழை அவனலங்கருதித் தியாகிக்கத் துணிவது அவ ளறங்காழ்த்த நல்லியல் சீர்மையதன்றோ? "தம்மிற் றமக்கினியார் 'தாம் வீழ்வார்;'" எனவே தம் உண்மைக்காதலர்க் கூறுநீக்கி, அவர் நன்மைகருதி உயிரை யும் உற்றவிடத் துயிரி னினிய மானத்தையும் உதவுவதே நல்லறமாக்கொள்வா ருயர்வுள்வார். அறமும் காதற்கிழவன் பால் அன்புமன்றிப் பிறிதறியா உள்ளமுடையகைகேயி, தன் கணவனுக் கூறுதவிர்ப்பான், தன்புகழைப் பரித்தியாகிக்கத் துணிவதில் விந்தையில்லையே? வேந்தன் விழவுகாண வழைக்கவந்தாரனைவருக்கும் இராகவன் நட்பினர்க்கும், அவ் விழாத் தடையுறத் தக்கதோர் சமாதானம் காட்டவேண்டும். மன்னவன் முன்னற மரபுடைச் சொல்லுண்மை வரலாறு கூறுவது போதிய சமாதானமாமேனும், அஃது அவன் பழி வளர்க்குஞ் செவிலியாகும். அவன் பழியஞ்சி யவ்வுண் மையை மறைப்பின், ஒன்று இராமன் முடிசூடித் தசரதன் தவறுடையனாகவேண்டும்; அன்றேல், அவ்விழவை நிறுத் திய பழி யொருவர் சுமக்கவேண்டும். பழிபரிப்பா ரில்வழி மன்னவன் பாவந்தவிர்க்கும் வழி வேறில்லை. அதனால், தனக்கினிய தசரதன் புகழ்பரிக்க, அவன் படிறோம்பித் தானே பழிசுமக்கத் துணிந்தாள், அவன் கற்புறு காதன் மனையாள். சம்பரன்போரிற் புண்பட்டுக் களைத்து மயங்கிய தன்கணவனுயிரோம்பித் தன்னுயிரைப் பேணாது இரவனைத் தும் ஊக்கத்துடன் தேரில் அவன் இறவாமற் காத்தகாலைத் தசரதன் விரும்பித்தந்த வர மிரண்டையும், அவன்வழித் தன்றித் தனக்கென ஓர் நலம் அறிகிலாமையால், இதுவரை யுபயோகப்படுத்திலாதாள், இன்று அவன்றம் பேணுவதற் குரிய கருவிதருவுவாள், அவ்வரங்களையே முன்னிட்டு, தன் புகழைப் பலியாக்கி, மன்னற் கறத்தொடு புகழ்நிறுத்தக் கைகேயி துணிவதானாள். தன்னெண்ணத்திற் கிடைநின்று தடைசெய்வதற்குக் கைகேயியை வைது வெறுத்துறுத்த தசரதன், தன் பெருவெகுளிக்கிடையும், அவளை நோக்கி

"நீ எப்பொழுதும் எனக்கு நன்மையையே விரும்பும் சுபாவ முடையவள்," ‡ "நீ இதற்குமுன் எனக்குக் கொஞ்சமாயி னும் அயுக்தமாகவாவது அப்பிரியமாகவாவது செய்ததில்லை ......அப்படிச் செய்வாயென்று நான் இப்பொழுதும் நம்ப வில்லை......நீ தர்மத்தை உல்லங்கனம் செய்யப் பயப்படுந் தன்மையள்," என்று பலமுறை யவள றவியல்சுட்டிப் புகழ்வதாக வான்மீகி கூறுகின்றார். அறஞ்சூழாது தன் மக வாசையால் தன்னை யொன்று பாவம் அன்றேற் பழிக் கிலக்காக்கின்ற மன்னனைப் பாவம்நீக்கிப் பழியும்விலக் கிப் பாதுகாக்க விரும்பிய பெருந்தேவி, அவனுற் பிழைக் கப்பட்ட அறத்துக்குத் தன் புகழையே இரையாக்கத் துணிகின்றாள். புறவி னுயிரோம்பத் தன்னுடலரிந் துதவிய மானவன் வழிப்பிறந்த மன்னன் அறமனையாள், தன் புரு ஷன் புகழோம்பத் தான் பழிசுமக்க அஞ்சுவளோ? இவ்வாறு மந்தமதிவிருப்பால் தசரதனெய்தவிருக்கும் பாவமும் பழி யும் நீக்கி, அதனாற் றன்கற்பும் கணவனறத்தொடு புகழுங் காத்து, அவ னறஞ்சான்ற மரபுடைச்சொல்லும் ஓம்பத் துணிந்தவழி, பழிக்கும் அஞ்சித் தளராது நிறைக்கடனை நெஞ்சறிகரியாய் நெறியாற்றித் தன் பெண்மையறம் பேணுங் கைகேயி, "தற்காத்துத் தற்கொண்டாற் பே ணித் தகைசான்ற-சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் பொய்யில் புலவன் பொருளுரைக்கு முற்று முத லிலக்காக நிற்றற்குரியள்.

இவ்வாறு மன்னவன் முன் சொல்லறம் திறம்பாமற் காத் தலை மேற்கொண்ட மங்கையர்க்கரசி, பாவமொடு பழியும் அவனை யணுகாவண்ணம் வினைசூழ்ந்து துணியலானாள். தொல்லைச் 'சுல்கப் பிரதிஜ்ஞை' வரலாற்றை யறவே தான் மறைக்க நினைத்தாள். தனக் கவன் முன் கொடுத்து வைத்த வரமிரண் டிராமனபிஷேகத்தை நிறுத்துவதாற் கொடும்பழி தனக்கும், பெரும்புகழ் மன்னனுக்கும் வளர்வ தோர்ந்தாள். "மகவாசையால், பேதை, பெற்றிருந்த வரங் கோலிப் பரதனுக் கரசிரந்தாள்; தந்த தன்சொல் மாற்ற வாற்றாத் தகையாளன் தசரதனாகையால், அவள்கேட்டதை மறுக்க அஞ்சி, வண்மை எஞ்சாது வளர்த்து, வள்ளல் துஞ் சுவதானான்," என்று எவரும் அன்றுமுதற் பேசலானார். பெண்டிர் பேரரசி, பெண்ணறமோம்பித் தானே விரும்பிப் "பெரும்பழி தேடிக் கொண்டாள்." மன்னவன்புகழை மாசுபடுத்தும் இம் முன்வரலாற்றுண்மையை அவன் நலம் விரும்பி மறைக்கத் துணிந்த தேவி, தானே அவனிடம் வர மிரந்து, மகவாசையால் மதிமயங்கித் தசரதன் வரந்தரத் தாழ்த்தபோது அறங்கூறி வற்புறுத்தி வாங்கலாயினள்.* "அவனுக்கு உண்மையை அறிவுறுத்தித் தன் விருப்பத்தை எளிதில் முடித்திருக்கலாமே? அதை விடுத்து, அவனிட மும் வரத்தை வியாஜமாக்கி, வாதித்து வாதைப்படுவா னேன்?" என்று ஈண்டுச்சிலர் வினவுவது இயல்பு. அவ ளியல்புங் கொள்கையும் அவ்வாறு அவளைச் செய்யவிடா. அனைவருக்கும், உண்மையை மறைத்து, தன் ஒருமகன் பர தனுக்கு அரசுதரவிரும்பித் தானே வரமிரந்து மன்றுடி வாங்கினதாய் அறிவிக்கத் துணிந்தாள், வேந்தன் புகழோம்ப வேறுவழி காணாக் கற்பரசி. இப்படித் துணிந்தபிறகு தசரத னுக்கு மட்டும் அவள் உண்மையைச் சொல்லுவானேன்? சொன்னாலவன் செயலும் பின்விளைவும் என்னாமோ? தசர தன் அறப்புகழ் நலத்தையே விரும்புமவட்கு, அவ்விருப்பம் அரிது முடிவதாயின், அதற்கு அஞ்சிச் சோர்ந்து எளிதுவழி தேடிப்பெண்ணறம் பிழைப்பளோ பெருந்தேவி. 'பரிந்தோம் பிக் காக்க'த் தகும் 'மனையற ஒழுக்கத்தின் ஒல்கு'வளோ உரவுடைய கைகேயி, "இழுக்கத்தி னேதம்படுபாக்கறிந்து" வைத்தும். மேலும், பரதனது ஆக்கமேனும் இராமன் கேடேனும் அவள் விரும்புவதாயினன்றோ, அவள் அதை

* கழுவாய்=பரிகாரம் அல்லது பிராயச்சித்தம்.

‡ ஸர்க்கம் - 10.

* அயோத்தி-சருக்கம்-13.



எளிதில் முடிக்க வழிதேடவேண்டும்? அதற்கு மாறாகக் கணவனைப் பிறரெவரும் சொல்லறம் பிறழ்ந்தானென வசைகூறப் பொறாது, அவன்பாற் காதலாற் பசைந்த சிந் தையள், தானே அவன்முன் அப்பழிதூறத் தருக்குவளோ? 'பிறர் தீமை சொல்லாநலத்ததே சால்'பன்றோ? அச்சால் புடையாள், பிறர் அனைவருக்கும் தான் வரத்தை வற்புறுத்தி இராமாபிஷேகத்திற் கிடையூறிழைப்பதாய்த் தெரிவிக்கத் துணிந்தபின்னர், தன் கணவனிடம் அதனை யொழித்து, அவனுள மூளைந்து நாணொடு வெகுளியால் நலிந்து மாழ்க, வேறு கூறுவளோ? கூறுவதில், யார்க்கேனும் யாதேனும் "புரைதீர்ந்த நன்மைபயக்கும்" ஆக்கமும் அறமும் உண்டா? தூயசிந்தையள், தன் கற்பறக்காதலாற் கருதியதை முட் டின்றி முடிக்க நிறைகுறையா நேசமுறையால் தக்க வினை தேர்ந்த மெல்லியலாள், அறநெறியிற் சிந்தை காழ்த்துச் சோர்விலளாய்க் காதற்கற்பறமாற்றிய செவ்விகருதியன்றோ, கம்பர், அவள் "தெரிந்து செயல்வகை"ச்செய்தி கூறும் பகுதிக்கு, அவள் 'சூழ்வினைப்படலம்' என்று பொருந்தப் பெயர் புனைந்துள்ளார்? செம்மாந்து செருக்கிய திமிருடைப் பெண்டிரின் தேராச் சிறுசெயலன்று, தெய்வக்கற்பினள் ஆழ்ந்து சூழ்ந்து தெளிந்து துணிந்த அறவினைகூறும் பகுதி, என்பதைத் தலைப்பெயராலேயே நம் கவியரசர் நன்கு அறி வித்துப்போந்தார்.

இனிக் கருணைக்கடலும் கற்பினுக் குறைபதியுமானகைகே யிக்குக் கணவன் புகழறமோம்புதலே கருத்தும், பரதனிடம் போலவே இராமனிடம் காதலும் உண்மையாயின், வரமென வாங்கு மரசை இராமனுக்குத் தானே தந்துவக்கத் தசரதன் வேண்டியபோது விரைந் துதவ விரும்பா திருந்ததேன்? எனில், கூறுவன். சிறந்தகுணப் பரதன் பிறந்துரியனாக லான், அவனுடைமையா மயோத்தியரசில் அவனறியா தவள் கொடையுரிமை மேற்கொள்வ தறமெனக் கருதகில் லள். கைகேயி தன்னிடம் நிலைத்த அன்புடையளாகவும், தனக் கரசுதருமாசையால் வேந்தனைத் தூண்டி அவளே தன் அபிஷேகத்தை விரைவு பண்ணுவதாகவும் இராமன் சீதைக் குரைத்துள்ளதை * வான்மீகர்கூற அறிந்த நாம், அவளை இராமனுக்கத்தி லழுக்காறுடையளாக் கருதற் கிடனில்லை. அறத்திலூன்றிய அவளுளத் திறத்தையும் நன்கறிவோம். 'சுல்க'க் கொடைக்குமுன் தானுடைய தனியரசைத் தசர தன் விவாககாலத்தில் விரும்பி "மரபுடைச் சொல்லுடன்" தந்ததாலும், சுல்கச்சூளறமுறையாலும், பரதன் பிறந்ததும் அரசு அவனதாகிவிட்டதென்பதை, "வரனில் உந்தை சொன்மரபினு லுடைத், தரணி நின்னதென்றியைந்த தன் மையால், உரனில் நீபிறந் துரிமை யாதலால் அரசு நின் னதே யாள்க" எனக் கம்பரும், "நமது பிதா உன் மாதா மகரிடம் அவர் மகள்வயிற்றுப் பேரனுக்காமாறு அயோத்தி யரசைப் பிரதிஜ்ஞையுடன் சுல்கமாகக்கொடுத்தார்; ஆன படியால் நாடு உனதேயாகும்" என வான்மீகரும், பரத னுக்கு இராமன்வாயால் விளக்கியுள்ள விவரமு மறிவோம். கணவன்பாற் கழிபெறுங் காதல்காரணமாய் அவன் விருப் பமே தன் அறமாகக் கொண்டொழுகிய கைகேயி, தன்னலம் வேறுணராமையால், மணந்தபின் தனக்கு அவன் தந்த வரங்களை மறந்ததுபோலவே அதற்குமுன் நிகழ்ந்த "சுல்க" சம்பவத்தையும் மறந்திருந்தாள். மந்தரை சொல்லக்கேட்ட பிறகே இவைகளினுண்மை யுணரலானாள். உரிய மகனை யூரகற்றிப் பிரியமகனுக் குடைமையற்ற நாடளிக்கப் பரபரக் கும் தசரதன் றவறறிந் ததனைத் தடுக்கவிரும்புந் தகை யணங்கு, தானுமத் தவறிழைக்க விழைவ தெங்ஙனமாகும்? அறம்புரத்தலன்றிப் பரதனே பட்டமெய்தி யிராமனுக் கர சில்லா திருப்பதொன்றே அவள் விருப்பமன்று என்பதற்கு, பரதனில்லாதபோது தான் தரத் துணியாதவள் பிறகிரா மனுக்குப் பரதன் தருவதைத் தடுக்காமையே தக்க சான் றாம். பரதனுக்குப் பிறப்பாற் பாத்தியமின்றித் தரணி தன் தனியுடைமையாகில், இராம னரசுபெறுவதை எனைத் தானும் தடுப்பதே அவள் திருவுளமாகில், கைகேயி பின் பரதன் இராமனுக்கு அரசு தருவதையும் தடுக்கமுயன்றி ருப்பாளன்றோ? இராமனை யழைத்துவந்து முடிசூட்ட விரும்பிய பரத னுளக்கோள் அறிந்த தேவி, அதைத் தடுக் காமலவனுடன் இராமனை யழைக்கச் சென்றதொன்றே அவள் மாசற்ற மனத்தூய்மையையும், இராமனுக்கத்தில் அவ ளுண்மையார்வத்தையும் இனிது விளக்குவதாகும்.

சுல்கச்சூள் உண்மையை உரைத்து இராம பட்டாபி ஷேகத்தைத் தடுக்காமல் இருவரங்களை வியாஜமாய் வைத்துக் கைகேயி விவகரித்தற்கு ஸ்ரீமான் பாரதியார் கூறுகின்ற காரணங்கள் இருந்தவாறு இவ்வாறு. இனி, பரதன் தன் உரிமையை எய்துதற்கு இராமன் காட் டிற்குப் போவது இன்றியமையாததென அவன்பால் இரக்கமுள்ள சிற்றன்னை நினைத்தது ஏனெனப் பாரதி யார் காட்டுகின்ற காரணங்களையுங் கண்டபின் அவை தம் அமைதியை ஆராயப்புகுவது தகுதியாம்.

* சருக்கம் - 16.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜெண்ட்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.


குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
டிப்போ.,
பம்பாய்
கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA NANJANGUD
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
ஜீவஸுதா (Reg.)
பாதாமி ரசாயனம்
பிருங்காமலக தைலம்
பிரான்சு:
மதுரை
காஞ்சீபுரம்.
ஹோல் ஏஜெண்ட்:- யுனைடட் கன்ஸர்ன் 54 பந்தர்தெரு, சென்னை.

:: அருந்தமிழ் நூல்கள் ::

| | ரூ. | அ. |
|---|---|---|
| மூவர் தேவாரம் அடங்கன்முறை ... | 7 | 0 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் ... ... | .4 | 0 |
| இராமலிங்கசுவாமி திருவருட்பா திருமுறை | 7 | 0 |
| நைடதம் மூலமும் உரையும் ... ... | 4 | 0 |
| பட்டினத்தார் பாடல் உரை ... ... | 2 | 0 |
| அருணசல புராணம் „ ... ... | 2 | 0 |
| தாயுமானவர் பாடல் உரை ... ... | 4 | 0 |
| „ மூலம் மட்டும் ... | 1 | 8 |
| திருப்புகழ் மெய்ஞ்ஞான விருத்தியுரை ... | 2 | 0 |
| பாராயணத் திருப்புகழ் ... ... | 2 | 0 |
| விநோதரசமஞ்சரி ... ... | 2 | 8 |
| ஸ்ரீபகவத்கீதை (திராவிட மகா வியாக்யானம் | 3 | 8 |
| „ வசனம் ... ... | 2 | 0 |
| „ (பாகெட் சைஸ்) ... | 1 | 0 |
| நாகம கூளப்ப நாயகன் விறலி விடுதூது | 0 | 12 |
| ஔவை அருந்தமிழ் ... ... | 0 | 12 |

மற்ற எல்லாத் தமிழ்நூல்களும், தேசிய நூல்களும், நாவல்களும், புராணங்களும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

கே. எஸ். மணியம் அண்டு கம்பெனி,
புஸ்தக வியாபாரிகள்,
இராயப்பேட்டை, சென்னை.

:: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணு 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta.

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply to the Company to-day.*

**R. G. Das & Co,** OR **Mr. T. A. Anantachari** B.A.
*Managers.* *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

பிரசுரங்கள்.

சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. மூச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.



# வர்த்தமானம்

வடஇந்தியாவில் சிறைகளில் இடம் போதாது போகவே கராக்பூர் என்னுமிடத்தில் ஒருபுதிய சிறைச்சாலை கட்டப்பட்டுள்ளது. இச்சிறைச்சாலைக்கு அதிகாரியாக M. B. தத்தர் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கராக்பூர் செய்தி கூறுகின்றது.

***

இங்கிலாந்தில் கடுமையான உஷ்ணம்ஏற்பட்டுள்ளதென்றும், வெயில் 94 டிகிரி காய்கின்றதென்றும் சென்ற 19 வருஷங்களாக இல்லாத உஷ்ணம் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றதென்றும், இதுவரை 16பேர் இறந்தனர் என்றும், ஏராளமானவர்கள் வயித்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும், தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டன வென்றும் இங்கிலாந்துச் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

வங்காள போலீஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரலான F. W. லோமனும், டக்கா போலீஸ் சுப்பிரண்டண்டான E. ஹாட்சனும், மிட்போர்ட் வயித்தியசாலை சென்று வீட்டுக்குத் திரும்புகையில் சுடப்பட்டனர் என்றும் லோமன் இறந்தனரென்றும், மற்றவர் நிலையும் கவலைக்கிடமானதாயிருக்கின்றதென்றும், இதுவரை குற்றவாளி அகப்படவில்லை என்றும் டக்காச் செய்தி கூறுகின்றது.

***

'மதுரை ஜில்லா உத்தம பாளயத்தில் நடந்துவரும் பாரதி' என்னும் மாதப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் நாராயணசாமி அவர்கள் அரசியல் குற்றத்திற்காக ஜூலை மாதம் 30ந்-தேதியன்று, கைது செய்யப்பட்டு ஒரு வருஷ வெறுங்காவல் தண்டனை பெற்றார். அவர் சிறை சென்றதினால் பத்திரிகை நின்று போனதென்பதில்லாது பாரதியை வெளியிட்டுவர முயன்றும் இதுவரை இயலவில்லை; எனினும் அதை வெளியிடுவதற்கு அரசாங்கத்தார் அனுமதி வேண்டுமானபடியால், காலதாமதமாகின்றது. இன்னும் சில தினங்களில் அரசாங்கத்தார் அனுமதியும் கிடைத்துவிடும்.பின்னர் பாரதி எப்பொழுதும்போல் செவ்வனே நடந்துவரும் என்பதை நேயர்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன். கூடிய சீக்கிரத்தில் இவ்வாண்டு 8வது இதழும் 9-வது இதழும் வெளிவரும்' என்று பாரதி கார்யாலய மானேஜர் அறிவிக்கின்றார்.

***

சமீபத்தில் டக்காவில் நடந்த கலகத்தைப்பற்றியும், அக்கலகத்தை அடக்க அதிகாரிகள் கையாண்ட முறையைப்பற்றியும், இப்பொழுது லண்டனில் இருந்துவரும் ரவீந்திர நாதடாகூர்'ஸ்பெக்டேடர்' என்னும் பத்திரிகைக்கு எழுதியுள்ள கடிதச் சுருக்கம்:—

"டக்காவில் நடந்த வகுப்புக் கலகத்தைப் பற்றிப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் எல்லாம் மௌனம் சாதிப்பது விளங்கவில்லை, அந்தக் கலகத்தில் சேதமும், சொல்ல வொண்ணுக் கொடுஞ்செயல்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் போலீசார் சரியானகாலத்தில் தலையிட்டுக் கலகத்தை அடக்கிவிடாது வாளாவிருந்தனர். ஒரு ஆங்கிலேயருக்குக் காயம் பட்டிருந்தாலும், ஐரோப்பிய வகுப்பினருக்கு இக் கலகத்தால் சௌகரியக் குறைவு ஒருசிறிது ஏற்பட்டிருந்தாலும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் மௌனமாய் இருந்திரா? நமது டிரஸ்டிகளாய் இருக்கும் வேலையை ஏற்றுக் கொண்டுள்ள பிரிட்டிஷார் நம்மை ஒரு பொருளாக நினைத்து நமதிடம் அக்கரை கொள்ளவில்லை என்று இதிலிருந்து எண்ணவேண்டி யிருக்கின்றது. எனக்கு இந்தியாவிலிருந்துவந்த கடிதங்களிலிருந்து,பிரிட்டிஷ் நீதியில் நம்பிக்கை வைத்துக்கொண்டிருந்த ஒருவர் இருவரும் இப்பொழுது பிரிட்டிஷாரிடம் நம்பிக்கையை இழந்து விட்டனர் என்று தெரிகின்றது. மற்றச் சம்பவங்கள் பொதுஜனங்களிடம் பிரிட்டிஷ் நீதியில் நம்பிக்கை வைக்காது செய்தன. டக்கா நிகழ்ச்சி ஆங்கிலேய ஆட்சியின் அஸ்திவாரத்தையே அசக்கிவிட்டது என்பதில் சந்தேகமில்லை.

***

நாகப்பூரைச்சேர்ந்த, பானி உமாரி சுகாரி, சிகேரி, அனர்க்கான் முதலிய விடங்களில் வனசத்தியாக்கிரஹம் நடந்ததென்றும், சந்தாவென்னுமிடத்தில் நடந்த சத்தியாகிரத்தில் கைது செய்யப்பட்ட தொண்டர்களில்|சிலருக்கு 6-மாதக்கடுங்காவல் தண்டனையும், 12 பேருக்கு சவுக்கடியும் விதிக்கப்பட்டது என்றும் நாகப்பூர் செய்தி கூறுகின்றது.

***

அஸ்ஸாம், கௌஹாத்தி காங்கிரஸ் கார்யக்கமிட்டிகளும், அஸ்ஸாம் வாலிபர் சங்கமும் சட்ட விரோதமானவையென்றும், எனவே கார்யக்கமிட்டிக் கூட்டங்களும், வாலிபர் சங்கக்கூட்டமும் நடைபெறலாகாவென்றும் அஸ்ஸாம் அரசாங்கத்தார் அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றனர் என்று அஸ்ஸாம் செய்தி கூறுகின்றது.

189119

***

டாக்டர் டெஜ்பகதூர் சாப்ரூவும், ஸ்ரீ ஜெயகரும் இன்னும் ராஜி முயற்சிசெய்து வருகின்றனர். இதுவரை என்ன முடிவாயுள்ளது என்று தெரியவில்லை. ராஜி முயற்சியில் பலர் நம்பிக்கையை இழந்து வருகின்றனர். நேற்றுப் பண்டிதர் மோத்திலால் நேருவுடனும் அவர் பிள்ளை ஜவாரிலாலுடனும் இருவரும் பேசியிருந்தனர் என்றும், அவர்கள் காந்தியடிகளுக்குக்கடிதம் ஒன்று எழுதிக்கொடுத்திருக்கின்றனர் என்றும்,இக்கடிதத்துடன் இருவரும் காந்தியடிகளைப் பார்ப்பார்களென்றும் தெரிகின்றது. ஹிந்து ஆசிரியர் ஸ்ரீமான் A. ரங்கசாமி ஐயங்கார் மோத்திலால் நேருவைக் காணச் செல்கின்றாராம். இவர் ராஜி விஷயமாகத்தான் போகின்றார் என்று தெரிகின்றது. எனவே சீக்கிரத்தில் ஒருவிதமான ராஜி ஏற்படலாம் என்று பலர் கருதலாகின்றனர். இன்னும் ஒருவார காலத்தில் ராஜி விஷயமாய் ஒரு முடிவு ஏற்படலாம்.

***

மீராபாய் என்று பெயர் புனைந்து கொண்டிருக்கும் மிஸ் ஸ்லேட்என்னும் ஐரோப்பியமாது கூறுவதாவது: பம்பாய், வங்காளம், சென்னை மாகாணம் முதலிய பலவிடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து முடித்தேன். பம்பாயில் அரசியல் ஊக்கம் வலுவடைந்தே வருகின்றது. அதிகாரிகளின் அடக்குமுறை கோரியபயனை அளிக்கவில்லை. தலைவர்களும் ஜனங்களும் வியாபாரிகளும் ஒன்றுசேர்ந்து சுதந்திரப் போராட்டத்தை நடத்துகின்றனர். கல்கத்தாவின் நிலைமையோவெனின் ஜனங்களின் ஊக்கங்குன்றவில்லை. மூலைமுடுக்குகளெல்லாம் போலீஸ் சார்ஜண்டுகளும், ஐரோப்பிய போலீசாரும் இருந்துவருகின்றனர். போலீஸ் ஒற்றர்களும் மும்முறமாகத் தங்கள் வேலையைச் செய்துவருகின்றனர். எனவே கல்கத்தா தூங்கவில்லை. வியாபாரிகளும் கூட்டுறவு தருகின்றனர். சென்னை மாகாணந்தான் தூங்குவதுபோல் காணப்படுகின்றது. ஜனங்களிடம் உற்சாகம் இருந்தே வருகின்றது. இருந்தபோதிலும் ஜனங்களுக்கு ஊக்கம் தருவதற்குத் தலைவர்களே வேண்டும். சிறையில் சிலதலைவர்களும், வீட்டில் சில தலைவர்களும் இருப்பதால் சென்னை மாகாண ஜனங்கள் பெற்றோரை இழந்தவர் போலிருக்கின்றனர். சென்னையில் பகிஷ்காரவேலை சரியாய் நடைபெறவில்லை. அன்னியச்சரக்குக்கள் விற்பனையாகின்றன. இந்தப்போராட்டத்தில் பகிஷ்காரமே முக்கியமானது, எனவே சென்னை வாசிகள் கதரை உடுத்துஅன்னியத்துணிகளைப்பகிஷ்கரிக்கவேண்டும்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு „ | „ | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணா | 0 4 0 |

விலாசம் :— 'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



காந்திக்கு ஜேய் !

கதர் சில்க் அங்க வஸ்திரம்.

சுத்த கதர் சில்க். கையினால் செய்த பட்டு. 5 மு. பட்டு 1-க்கு ரூ. 3-8-0 முந்துங்கள். 500 பட்டுகளே வந்திருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸ்
373 எஸ்பிளனேடு, சென்னை.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளைவிட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சிமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
802, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | |
|---|---|---|
| பால காண்டம் ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)